388

செந்தமிழ்

# செந்தமிழ்

031ந211,N02
N22·20-12
225102.

2 8 NOV 1922
388
225102

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி உ0.] துந்துபி-ஹூ ஐப்பசி-மீ [பகுதி கஉ.
Vol. XX. October–November–1922. No. 12.

உள்ளுறை.

மேற்றிசைச்செல்வம்:— ஸ்ரீமத். பண்டித-மயில்வாகனம் சசுசு
புருரவச்சரிதை:— உதவிப்பத்திராதிபர் சஎசு
கோனசீமைத் திராவிடப் பிராமணர்கள்:— ஸ்ரீமத். K. C. வீரராகவையர் M.A., L.T., சஅக
சிந்தமதி:— ,, T. N. அப்பனையங்கார் சஅ-தாடு
வடமொழி முதுமொழி யன்று:— ,, சி. கணேசையர் சஅஅ
தொல்காப்பியவாராய்ச்சி:— ,, K. S. நவநீதகிருஷ்ணபாரதி சகூச
பெரியபுராணச்செய்யுட் டொகையாராய்ச்சி:— ,, சோமசுந்தரதேசிகர் சகூகூ
சிற்றாராய்ச்சி:— பெயர்விழையான் ருஈ
செந்தமிழ் இருபதாந்தொகுதியின் உள்ளுறை:—
...டற்புராணம்:— உதவிப்பத்திராதிபர் 57–72.

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்
பதிப்பு.

...ரூ. 4.] [தனிப்பிரதி அணா-8.
...ரோடுகளுக்கு ரூ. 4—8—0.

## "செந்தமிழ்"நேயர்களுக்கு வேண்டுகோள்.

இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால், சென்ற இருபதுவருடகாலமாகத் தமிழ்மொழியின்வளர்ச்சிகருதி மாதமொருமுறை வெளியிடப்பெற்றுவரும் இச்"சேந்தமிழ்"ப் பத்திரிகையானது, பல பண்டிதர்களாலும் எழுதிவரப்பெறும் அரியவிஷயங்களை எளிதில் எல்லோருமுணர வெளியிடும் பெருமைவாய்ந்ததென்பது யாவரும் அறிந்ததே. அது, செந்தமிழ்நேயர்களின் அபிமானத்தையும், பண்டிதர்களின் ஆதரவையுங்கொண்டே இப்பகுதியோடு இருபதாந்தொகுதி முற்றுப்பெற்றிருக்கிறது. இனி 21-ம் தொகுதி தொடங்கப்பெற்று அதன் முதற்பகுதி கூடியசீக்கிரம் வெளிவரும். அப் பகுதி வழக்கம்போல் அங்கத்தினர்களுக்கும், செந்தமிழ்ச்சந்தாதார்களுக்கும் அத் தொகுதியின்வருஷச்சந்தாவுக்கு வி. பி. யில் அனுப்பப்பெறும். செந்தமிழபிமானிகள் வழக்கம்போல் வி. பி. யை அன்புடன்பெற்றுப் பத்திரிகையை ஆதரித்துவருவதோடு தங்கள் நண்பர்களையும் பத்திரிகையைத் தருவித்துப் படித்துவரும்படி தூண்டவும், பண்டிதர்கள் வழக்கம்போற் சிறந்த விஷயதானமளித்துச் செந்தமிழைச் சிறப்பித்துவரவும் வேண்டிக்கொள்ளப் பெறுகிறார்கள்.

மதுரைத்தமிழ்ச்சங்கம்
16—11—22.

லெக்ஷ்மிநாராயணையா,
மானேஜர்.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி உ௰.] துந்துபி- ௵ ஐப்பசி-மீ [பகுதி கஉ.

Vol. XX. October–November–1922. No. 12.

## மேற்றிசைச்செல்வம்.

## (The Wealth of the West.)

(௩௯௰—ஆம்பக்கத் தொடர்ச்சி.)

### இரண்டாம் அதிகாரம்.

### நாகரிகவரலாறு.

ஹம்முருபியரசன் செங்கோல்நடாத்தியகாலத்துப் பாபிலோனியம் மிகவுஞ் சீர்திருத்தமுற்றிருந்தது. சூசா என்னும் இடத்திற்குச் சமீபத்திலே மோர்கன் என்பவரால் இற்றைக்கு இருபத்தொருவருஷங்களுக்குமுன்பு கண்டெடுக்கப்பட்ட சிலாசாசனம் இதற்குப் போதிய சான்றாகும். எட்டடியுயரமாகிய இக்கல்லிலே இருநூற்றெண்பத்திரண்டு பிரிவுகளாலமைந்த ஒரு சட்டம் வரையப்பட்டிருக்கிறது. இச்சட்டத்தின் தன்மையை யாராயுமிடத்து இதனைக் கைக்கொண்டுநடந்தசாதியார் மிகவும் நாகரிகம்படைத்தவர்களாயிருக்கவேண்டுமென்னுமுண்மை புலப்படுகின்றது. யவனபுர ரோமபுர நாகரிகம் மேனாட்டுநாகரிகத்தை எவ்வாறு வழிப்படுத்திற்றோ அவ்வாறு பாபிலோனியநாகரிகமானது யவனபுரநாகரிகத்துக்கு முதலாகின்றது. எபிரேயநாகரிகமும், எகிப்திய அசீரேய பாபிலோனிய பினீசிய நாகரிகங்களின் வழிவந்ததன்றித் தனக்கென ஒரு பற்றுக்கோடு இல்லாதது. நமது தாய்நாடாகிய பரதக்கண்டத்தின் நாகரிகமோ இவையெல்லாவற்றுக்கும் முற்பட்டது. செல்வச் செருக்கினால் அறிவுமூடுண்டுகிடக்கிற மேற்றிசைப்பிரபுக்கள் இதனை யறிந்தாலும் வெளியிடுவதில்லை. நமது நாகரிகத்திலீடுபட்ட மேனாட்டு

அறிவுடையார்சிலர் நமது முன்னோருடைய பெருமையைப் பெருக்கூறிப் பின்னோராகிய நம்மை இழிவுபடுத்துவர். இனி நாமே நமது முன்னோருடையபெருமையைப்பற்றி வாய்ப்பறையறைய வெளிப்படுமிடத்து அச்செயல் அன்னியருக்கு நகையைவிளைக்குமன்றி நம்பால்மதிப்புண்டாக்காது. என்னை, ஆண்மைகுன்றிச் சிறுமையடைந்திருக்கிற வறியனொருவன் செல்வர்பாற்சென்று தன்முன்னோர்பெயரைச்சொல்லி யிரக்கின்ற செய்கையை இழிதொழிலாக உலகம் மதிக்குமாதலின். பின்னர்ச் செய்யவேண்டுவதென்ன? நம்முடைய சிறுமைக்கெல்லாம்காரணமாயிருக்கிற பொறாமையையும் பிரிவினையையும் ஒருங்கே களைந்துவிட்டு உடல் பொருள் ஆவி மூன்றையுந் தேசசேவைக்கே ஒப்புக்கொடுத்து நமது தேசத்தையும் மொழியையும் பெருக்கமுறப்பண்ணுவோமாயின் நாமும் பெருமையடைவோம்; நம்முன்னோரும் பெருமையடைவர்.

4. பாபிலோனியம் சிறப்புற்றிருந்தகாலத்தில் வடக்கே தைகிரிஸ் நதிக்கரையிலேயுள்ள ஆசூர், நினிவே என்னும் நகரங்களிலே ஆசுரேய என்னும் செமித்தியகுலத்தார் வசித்துவந்தார்கள். இவர்களது நாட்டுக்கு மேற்கிலுள்ள தேசத்தில் கித்தியர் என்னும் ஒருசாதியார் இருந்தார்கள். இவர்கள் ஆரியமொழியும் ஆரியமதக்கொள்கையும் உடையவர்களென்பது சில ஐரோப்பியபண்டிதர்களுடைய துணிபு. கித்தியருக்கும் ஆசுரேயருக்குமிடையிற் சச்சரவுகள் இருந்தன. அங்ஙனமே தெற்கேயுள்ள பாபிலோனியருக்கும் ஆசுரேயருக்குமிடையிற் சிறுசண்டைகள் நடந்துகொண்டிருந்தன. சார்கோன் என்னுஞ் சுமேரிய அக்கேடியஅரசன் ஆசுரேயரைவென்று சிலகாலம் அவரது நாட்டைக் கைப்பற்றியிருந்தான். பின்னர் மித்தானிநகரத்தி லரசபுரிந்த துஷ்ரட்டன் என்னும் கித்திய அரசன் நினிவேநகரத்தைப் பிடித்துச் சிலகாலம் தன்னாணைசெலுத்தி வந்தான். கி. மு. ஆயிரத்தொருநூறும் ஆண்டுவரையில் ஆசுரேயர் திக்லாத்பிலேசர் என்னும் தமது அரசனுடைய சேனாதிபத்தியத்தின் கீழ்ப் படையெடுத்துச்சென்று பாபிலோனியத்தை வென்றார்கள். விவிலியநூலிற் பேர்குறிக்கப்பட்டிருக்கிற மூன்றாம் திக்லாத்பிலேசர் கி. மு. எழுநூற்றுநாற்பத்தைந்தாமாண்டுவரையில் இருந்தவன். இவனது புத்திரனாகிய நான்காம் சால்மனேசர் சமாரியாவில் நடந்த ஒரு யுத்தத்தில் இறந்துபோக உரிமையில்லாத பிறனொருவன் இராச்சியத்தைக் கைப்பற்றி இரண்டாம் சார்கோன் என்னும் பெயரோடு அரசுபுரிந்தான்.



இரண்டாஞ் சார்கோனுடைய மகன் சினக்கிரிபு என்பவன். இப்பெயரை ஆங்கிலமொழியிற் சிலர் சென்னசெரிப் என உச்சரித்து வழங்குவர். சினக்கிரிபு என்னும் பெயர் சின் என்னும் பாபிலோனியதெய்வப்பெயரினின்று வந்தது. இந்தச் சினக்கிரிபுதான் எகிப்துக்குப் படையெடுத்துச்சென்றான். சைநியம் நோய்வாய்ப்பட்டமையால் மீண்டுவந்துவிட்டான். இவனது பௌத்திரனாகிய ஆசுர்வனிபாலன் என்பவன் பின்னளிற் படையெடுத்துச்சென்று எகிப்தின் ஒருபகுதியைக் கைப்பற்றினன். யவனர் இவன்பெயரைச் சார்டானப்பாலுஸ் என்று வழங்குவர். இரண்டாஞ்சார்கோனுடையகாலத்துக்குப்பின் நூற்றைம்பது வருஷத்துக்குத்தான் ஆசுரேயராச்சியம் நிலைபெற்றிருந்தது. இதன்பின் செமித்தியகுலத்தாராகிய காலதேயர் ஆரியகுலத்தாராகிய மீதியர் பாரசீகருடைய உதவியைக்கொண்டு கி. மு. அறுநூற்றாறும்ஆண்டுவரையிற் பாபிலோனியத்தைக் கைப்பற்றினார்கள். அதுமுதல் கி. மு. ஐந்நூற்றுமுப்பத்தொன்பதாம்ஆண்டுவரையும் காலதேய அதிபதிகளின்கீழ்ப் பாபிலோனியராசரீகம் நடைபெற்றுவந்தது. இவ்வதிபதிகளுட் சிறப்புவாய்ந்தவன் இரண்டாம்நேபுகாத்நேச்சார். பாரசீக சக்கராதிபத்தியத்தை நிலைநிறுத்திய சைறஸ் அரசன் காலதேயமன்னனை வென்று கி. மு. ஐந்நூற்றுமுப்பத்தொன்பதாமாண்டிற் பாபிலோனியத்தைக் கைப்பற்றினன்.

5. சமயநிலை நாகரிகநிலையை மதிப்பிடுவதோரளவுகோல் ஆதலினால், பாபிலோனிய ஆசுரேய சாதியாரது சமயக்கொள்கைகளைப்பற்றிச் சிறிதாராய்ந்து அப்பாற்செல்லுவாம். பரிசுத்தநகரம் எனப் பொருள்படும் எரிது என்னும் பழம்பதி பாபிலோனியநாட்டாருடைய விசேஷஸ்தலமாக விருந்தது. இது ஊர் என்னும் நகரத்துக்கு இரண்டரை யோசனை தெற்கே பாரசீகக்குடாக்கரையி லிருந்ததாகத் தெரியவருகிறது. இக்காலம் உள்நாட்டிலிருக்கிறது. இந்த நகரத்திலே எயா என்னும் கடற்றெய்வத்துக்கு ஒரு கோயி லிருந்தது. தத்திப்பாயுந் திரையொலியில் அத்தெய்வத்தினது வாசகமும் பிற்பகலிற் கடற்புறத்தினின்று வீசும் மந்தமாருதத்தில் அவரது இனியசுவாசமும் புலப்பட்டனவாயினும் அன்பர்கள் அவர் உருவினைக் கண்டுகொள்ளவில்லை. அறிவுடையோர் சமுத்திரக்கரையடைந்தனர்; தினந்தினஞ் சமுத்திரத்தினின்று உதித்து அவிரொளிபரப்பி இருளினையகற்றிப் பகற்காலம் முழுவதும்

மனிதவர்க்கத்தினரிடையேயிருந்து ஏற்படுகாலையில் இல்லத்திற்கேகுஞ் செங்கதிர்மண்டிலத்தின் இயல்பினைக் கண்டார்கள். கண்டு, செஞ்ஞாயிறு கடற்றெய்வத்தின்புதல்வனாயிருத்தல்வேண்டுமென நிச்சயித்துப் பரிசுத்தபுதல்வன் என்னும் பொருளினதாகிய மார்துக் என்னும் பெயரிட்டு வழங்கினார்கள். மார்துக் என்னும் மொழி பிற்காலத்திற் சிதைந்து மெரொடக் ஆயிற்று. இந்தப் பரிசுத்தபுதல்வர் தமது தந்தைக்கும் மனிதவர்க்கத்தினருக்கு மிடையில் மத்தியஸ்தராக ஏற்பட்டார். இவர் மனிதரைத்துன்புறுத்திய சர்ப்பத்தின்சிரத்தைக் காலால் மிதித்து வெற்றிபெற்றார். இச்சர்ப்பந்தான் எத்தன்மையதோவென்றால் ஏழு தலைகளையும் ஏழுவால்களையுமுடையதாய் இருளுக்கும் பாபச்செயல்களுக்கும் அரசாயிருப்பது. கிரணங்களாகிய அம்புகளைச் செலுத்தி மார்துக் இச்சர்ப்பத்தைக் காயப்படுத்த அதனினின்று ஒழுகிய குருதி திசைகளைச் சிவக்கப்பண்ணிற்று. அந்திப்பொழுதில் இச்சர்ப்பம் உயிர்பெற்று மார்துக்கின் குதிகாலைக் கடித்து அவரை மேற்கொண்டது. இங்ஙனே தினந்தோறும் நடக்கும் கடற்றெய்வத்தின்புதல்வனாகிய மார்துக்கினுடைய வழிபாடு சிறந்துவந்தகாலத்தில் இவரது தந்தையாகிய எயாவின் லக்ஷணங்களும் ஜகத்காரணரென்று பாபிலோனியராற் கருதப்பட்ட வேல் என்னுந் தெய்வத்தின் லக்ஷணங்களும் இவர்மேல் ஏற்றப்பட்டு இவர் வேல்மெரொடக் என்னும் பெயரினைப் பூண்டார். ஹம்முருபியரசனின் வம்மிசத்தவர்கள் இத்தெய்வத்துக்குப் பலகோயில்களைக் கட்டினார்கள். இக்காலத்தில் எபிரேயராகிய யூதசாதியார் பாபிலோனியராற் சிறைப்படுத்தப்பட்டிருந்தார்கள்; பாபிலோனியத்தின் கடையரசனாகிய நபொநிதன் என்பவன் தனது சுகாநுபவத்தைப் பெரிதாங் கருதிக்கொண்டிருந்தமையால் ஆலயசேவையெல்லாம் குறைபாடுற்றது. இவனது புதல்வனாகிய வேல்சாசர்மீதும் புரோகிதர்களுக்கு விருப்பமில்லாமலிருந்தபடியால், பாரசீக அரசனாகிய மாற்றரசனை உவந்தேற்று அவன்கையிற் புரோகிதர்கள் அரசை ஒப்புவித்தார்கள். வனாந்தரத்திலலைந்து திரிந்த யூதசாதியார் நாகரிகமுறையைப் பயின்றுகொள்வதற்குப் பாபிலோனியநாட்டுச் சிறைவாசம் காரணமாயிருந்தது. யூதரது ஸ்மிருதியாகிய தல்முத் என்னும் நூல் பாபிலோனிய சட்டமுறைகளைப் பின்பற்றி யெழுதப்பட்டது. பாபிலோனியநாட்டிற் கல்விச்சாலைகள் பல இருந்தன. அயல்நாடுகளிலிருந்தவர்கள் பலரும் இங்குவந்து கல்வி பயின்றார்கள்.



6. இனி ஆசுரேயசாதியாரது சமயநிலையைப்பற்றி யொருசிறிது ஆராய்வாம். இவர்களது சக்காதிபத்தியம் அநேகதேசங்களைத் தன்னுளடக்கியிருந்தது. ஒருகாலத்திற் பாரசீகம், மீதியம், பாபிலோனியம், ஆர்மீனியம், சீரியம், பினீசியம், பலஸ்தீனம், எகிப்தின் சில பாகங்கள் ஆகிய எல்லாம் ஆசுரேயசக்காதிபத்தியத்தின்கீழிருந்தன. இந்நாட்களில் எகிப்தின் நாகரிகத்திலும்பார்க்க ஆசுரேயநாகரிகம் மேம்பாடுற்றுவிளங்கியது. பாபிலோனியத்தில் எல், ரு, மார்துக் என்னும் பெயர்களைக்கொண்ட சூரியதேவன் ஆசுரேயத்தாரால் ஆசூர் என்னும் பெயரினாற் றுதிக்கப்பட்டான் [ஆசூர் என்னும்பதத்திற் சூரியனென்னும் பதத்தின் பிராதிபதிகந் தோற்றுவதும், ரு என்னும்பதத்தில் ரவி தொனிப்பதும், எல் என்னும்மொழி தமிழிற் பரிதியங்கடவுளுக்குரிய பெயராதலும் உற்றுநோக்கற்பாலன] இச்சூரியதேவனோடு ஒப்புடைய மூவர் தேவர்களுளர். இவர் அநு, வேல், எயா என்னும் பெயரினர். மேலும் சின், ஷாமஸ், உல் என வேறு திரிமூர்த்திகளும் உளர். சின் மற்றெல்லாத்தேவர்களினுஞ் சிறந்துவிளங்கினார். இவருக்கு ஊர், போர்சிப்பா, பாபிலோன், கலா, தூர்சர்க்கின முதலிய இடங்களிலெல்லாம் பெரியகோயில்களமைந்திருந்தன. ஆண்டின் மூன்றாம்மாதமாகிய சிவன் என்னும் மாதம் இவருக்கு உரியதாகவிருந்தது. இளம்பிறைச் சந்திரன் இவருடைய இலச்சினை. இவ்வடையாளத்தினாற் குறிக்கப்படுவர். அன்றேல் நீண்ட அங்கியணிந்த மானிடவுருவமும் சிரசில் மும்முடியும் முடியின்மீது பிறைச்சந்திரனும் உள்ள உருவம் இவருடைய உருவமாகும். ஆசுரேய பாபிலோனிய காலதேயமனைத்திலும் படைத்தற்கடவுளுக்கு வேல் என்னும் பெயருண்டு.

7. இவ்வாறெல்லாம் மேலைத்தேசசாஸ்திரிகளாராய்ந்துகண்டிருக்கிற முடிபுகளை நமது புராணேதிகாசமுடிபுகளோடு ஒட்டி யுக்திகொண்டு ஊகிக்கக்கிடக்குஞ் சித்தாந்தங்கள் சில உள. அவற்றுள் ஒருசிலவற்றைக் குறிப்பிடுவோம். அவற்றை முடிந்தமுடிபுகள் என்று கொள்ளுதற்குப் போதியசான்றில்லையாதலால் 'இருத்தல்கூடும்' என்னும்படியிற்கொண்டு ஆராய்வது அறிஞர்கடன். ஸ்காந்தத்திற் சிங்கமுகாசுரன் வடமேற்குத் திசையிலுள்ள ஆசுரம் என்னும்நகரி லிருந்துவந்தான் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆசுரம் அந்த ஆசுரந்தானோவென்று எண்ணக்கிடக்கின்றது. சிங்கமுகன் சிவபத்தியுடையவன். ஆதலால் ஆசுரத்

தாரது பிரதானதெய்வமாகிய பிறைச்சந்திரனைமுடியிற்சூடிய சின் என்னுந்தெய்வம் சந்திரனையுருவப்படுத்திய தெய்வமோ அன்றேல், சந்திரசேகரன்றானோ வென்று ஐயுறவேண்டியிருக்கின்றது. எல், வேல், ஆசூர், எயா (அயன்), ஊர் என்னும் மொழிகளும் ஆராயற்பாலன.

8. தற்காலத்திலுள்ள பெரிய நகரங்களோடு ஒத்தசிறப்பின வாகிய நகரங்கள் எரிது, பாபிலோன், ஆசூர், நினிவே, நிப்பூர் என்னும் இடங்களிலிருந்தனவென்றும் இவற்றில் வசித்த மனிதர்கள் மிகவும் நாகரிகம் பொருந்தியவர்களாயிருந்தார்கள் என்றும் அறியவே இத்தேயங்களுக்கும் முந்தி நாகரிகமுற்றிருந்த வேறுபலதேயங்கள் இருந்திருக்க வேண்டுமென்னும் உண்மை புலப்படுகின்றது. புலப்படவே மனித சாதியாரது தோற்றத்துக்கு எல்லைகூறுவதும், ஆறாயிரவருஷத்துக்கு முன் உலகமில்லையென்று சொல்வதும் மூடவாக்கியமாமென்பது வெளிப்படையாகும். மிகப் பழமைபொருந்தியனவும் எகிப்திய யவனபுர ரோமபுர நாகரிகங்களுக்கு உற்பத்திக்காரணமாயிருந்தனவும், இயூபிருட்டஸ் தைகிரிஸ் என்னும் நதிகளின் கரையில் வளர்ந்தனவுமாகிய சுமேரிய அக்கேடிய, பாபிலோனிய, ஆசுரேய, காலதேய நாகரிகங்களைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்லிமுடித்தாம். இனி இவற்றையும் எகிப்தியநாகரிகத்தையும் பின்பற்றியதாகிய எபிரேயநாகரிகத்தைப்பற்றிச் சில கூறி, அப்பால் நீலநதிக்கரையில் வளர்ந்த எகிப்துநாட்டின் நாகரிகத்தை ஆராயப்புகுவாம்.

9. கற்பகக்காநீழலில்வைகுவாரேனும் அமராவதிநகரத்தாரது வாழ்க்கை அவ்வளவு சிறந்தாகக் காணப்படவில்லை. ஏனைபதேச சரித்திரங்களை ஆராய்வதுபோல விண்ணவர்நாட்டுச் சரித்திரத்தையாராய்ந்து எழுதுவோமாயின் அங்குள்ளார் அமிழ்துண்டு அழியாநிலைபெற்றிருக்கும்வாழ்நாளிற் பெரும்பாகத்தை அடிமைத்தனத்திலும் சிறைவாசத்திலுங் கழித்ததாக எழுதவேண்டிவரும். ஆண்டன்மைபடைத்த சூரபதுமன் இராவணேசுரனாதியோர் பெருந்தவஞ்செய்து எல்லாரையும் ஒப்பநோக்கும் இறைவனிடத்துப் பெற்ற அரியவரங்களினால் வானநாடரை அடிமைப்படுத்த அவரது துன்பத்திற்கு இரங்கிய காவற்கடவுள் மண்ணிடையுதித்து அசுரரைமடக்கியகதைகளைக் கூறுநூல்களே நமது புராணேதிகாசங்களாகும். இவற்றையொப்ப எபிரேய சாதியாரின்புராணமாகிய விவிலியபூர்வபாகம் அச்சாதியாரின் அடிமைத்



தனத்தையே பெருகக்கூறுகிறது. இந்நூலை ஆதாரமாகக்கொண்டு ஆராயுங்கால் எபிரேயசாதியார் எகிப்தியராலும், பாபிலோனிய ஆசுரேயராலும், பிலிஸ்தினியராதியோராலும் அடிமைப்படுத்தப்பட்டார்களென்றும் தம்மை அடிமையாக்கிய சாதியாரிடமிருந்து நாகரிகமுறையைப் பயின்று கொண்டார்களென்றுந் தெரியவருகிறது. சுருக்கமாகிய இவ்வாராய்ச்சியில் இச்சாதியாரது சரித்திரத்தைப் பெருக ஆராய இடமில்லையாதலின் இவர்களுடைய அரசருள் மிகச்சிறந்த சாலோமோன் அரசனுடைய காலத்தைப்பற்றி ஒருசிறிது கூறிமுடிப்பாம்.

10. பிலிஸ்தினியர் என்னுஞ் சாதியாருக்கு யூதர் அடிமைப்பட்டிருந்தகாலத்தில் சவுல் என்னும் ஒருவீரன் யூதசேனாதிபதியாக ஏற்பட்டு அம்மோனியர், மோவாபியர், ஏதோமியர், அமாலெக்கியர் முதலியசாதியார்களை வென்றானெனினும் பிலிஸ்தினியரை வெல்லவில்லை. அக்காலத்தில் இளம்பிராயத்தில் ஆட்டிடையன்றொழில்புரிந்தவரும் ஆண்டவன்பேல் அளவிறந்த அன்பின்பெருக்கத்தால் இசைப்பாக்களை யியற்றி அவற்றை யிசைக்கருவிகளிற்சேர்த்துப் பாடுமியல்பினரும் ஆகிய தாவீதென்னும் அரசர் பிலிஸ்தினியரை வென்று மணிமுடிசூடிப் பெருமையுற்றார். இவரது புதல்வரே சாலோமோன் அரசர். இவர் நீதிமன்னரும் ஞானவானுமாகவிருந்தார். இவருடையகாலத்தில் எருசலேம்பட்டணத்தின் தேவாலயம் பெரும்பொருள்செலவிட்டுக் கட்டப்பட்டது. இவ்வரசர் எகிப்துமுதலிய பிறநாடுகளோடு வியாபாரத்தொடர்பு உடையவராயிருந்தார். தமிழ்நாட்டாரோடும் கொடுக்கல் வாங்கல் செய்தார். நமது மொழிகள்சில எபிரேயபாஷையிற் கலந்திருப்பது இதற்கு ஒருசான்றாகும். தமிழ் அகில் எபிரேயமொழி அஹல்; தமிழ் தோகை (மயில்) எபிரேயமொழி துகிம்; வடமொழி கவி (குரங்கு) எபிரேயமொழி கொவ். வடமொழி இபம எபிரேயமொழி ஹபின். சாலோமோன அரசனுடைய காலத்திற் பினீசியதேசத்தாருக்குத் தலைவனாகத் தயர் என்னும் நகரத்தில்வசித்த அரசனுக்குப் பெயர் ஹிராம் என்பது. பினீசியர் கப்பலோட்டுமாலுமித்தொழிலிற் சிறந்தவர்கள். இவர்களைத் துணைக்கொண்டு சாலோமோன அரசனுடையகப்பல்கள் மூன்றாண்டுக்கொருமுறை கிழக்குத் தேசங்களுக்குப்போய் ஓபீர் எனனும் துறைமுகத்திலிருந்து பொன், வெள்ளி, யானைத்தந்தம், மயில், குரங்கு, நவமணி முதலியவற்றை ஏற்றிக்கொண்டுபோயினவென்று தெரியவருகிறது. ஓபீர் இலங்கைத்தீவாக இருத்தல்வேண்டுமென்பது பலரது துணிபு. பினீசியருடையநாகரிகமுஞ் சிறப்புற்றிருந்தது. இதனை யவனபுரநாகரிகத்தையாராயும்போது ஆராய்வாம்.

(தொடரும்)

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
திருமயிலை, சென்னை.

பண்டித-மயில்வாகனன்
B. Sc., (Lond.)

ஸ்ரீ:

# புரூரவசரிதை.

(௫௬௯-ஆம்பக்கத் தொடர்ச்சி)

## சந்திரகிரிப்படலம்.

---

விடமெழுந்தனவிங்கிருட்பிழம்பெழும்வேலை
யிடம்வலந்தெரியாநெறியூடுசென்றெதிர்ந்தா
ரடையலாருயிரடையவுமிதுவெனவகல்வான்?
றடைசெய்கின்றபொற்புரிசைசூழ்சந்திரகிரியே. (1)

புரந்தரன்பொருமன்னவனந்நகர்புகுந்தே
யரந்தைபுற்றிடுமக்களுக்கருத்துவானடிசில்
இரந்துகொண்டுவந்தீந்தனனென்னின்மற்றெவர்க்கு
நிரந்தரம்பெறநிற்குமோவாழ்வெனுநீத்தம். (2)

அப்பதிக்கணோரம்பலத்தாரிருட்போதில்
வெப்பமைத்திடுமேதினிப்பள்ளியின்மீதே
முப்புவிக்குமோர்முதல்வனுமன்னனுமுருகின்
றுப்பமைந்தவாய்த்தோகையுமைந்தருந்துயின்றார். (3)

கங்குல்பாதியிற்காவலர்க்கரசனுங்கமல
மங்கைபோலியமங்கையுமுணர்ந்தனர்மகாரைப்
பங்குவானவாவிளமையில்வருகெனப்பணித்த
துங்கள்பால்வரவோவெனவிழிப்புனலுகுத்தார். (4)

நின்றகங்குலின்பாதியுமுழுமையுநிறைந்த
வென்றிவெந்திறல்வேந்தர்கோன்முகமதினோக்கி
மன்றலோதிகட்காவியுங்காவியாய்மலர
வென்றுவானவனெழும்வரையிருந்தனளிப்பால். (5)

நுகத்தெழும்பரியேழுடைவெய்யவனேனைச்
சகத்தெழுந்திடத்தருமமுங்கருமமுந்தழைப்ப
மகத்தெழுந்திடும்பிரணவச்சுடரந்தமன்ன
னகத்தெழுந்தெனவெழுந்தனன்கடலகத்தன்றே. (6)



புலரிபோயினவாதவம்வந்தனபொருவி
லலரிவான்முகட்டாயினயாமிவணமர்ந்தாற்
பலரும்யாரெனவினவுவர்பலவெனப்பண்ணேழ்
மலரியாழ்மொழிமடவாலியம்பிடமன்னன். (7)

நனைவருங்குழல்வனிதைகேண்மக்கொருசெயலு
நினைதலின்படிமுடிதலுமுளதெனநினையேல்
வினைவரும்பயனாகியகூறையின்மெய்யை
யினையர்தம்வயத்தாக்குமோபோக்குமோவின்னம். (8)

யாரிடத்தினிற்புகுத்துமோவெந்தொழில்தருமோ
வோரிடத்தினிலெவையெவையூட்டுமோவூழின்
பாரிடத்தினியற்றியவினையினிற்பவ்வ
நீரிடத்தினிற்றிரணமொத்தலைவதேநெஞ்சம். (9)

ஊட்டுவானுளனொருவனிங்கொருவனையுறவா
யீட்டுவானெனிற்செல்லுதுமின்னமுமின்னல்
பூட்டுவானெனிற்பூணுதுமெனச்சிறைப்பொறிவண்
டாற்றுவார்குழல்வனிதைக்குமன்னவனறைந்தான். (10)

வேறு.

ஆனவனின்னணமறையவாயிழை
மேன்மொழியுரைத்திடாதிருந்தவேலையில்
வானளவியபுகழ்வணிகனீணிதிக்
கோனெனும்விச்சுவகுப்தன்றோன்றினன். (11)

தோன்றியவணிகர்கோன்றுணைக்கைவாரணம்
போன்றுயர்மன்னவன்முன்னம்போந்துநீ
தான்றியமனையொடுந்தனயர்தம்மொடு
மேன்றிவணிருந்தனையாவனீயென்றான். (12)

நிதிவணிகேசர்கோனிவைநிகழ்த்தலு
மதிகுலமன்னவன்மாற்றங்கூறுவான்
விதிவலியானகர்வெறுத்துப்போந்துளோம்
பதிசிறிதுதவுவார்தம்மைப்பார்க்கின்றோம். (13)

மைந்தர்கள்சிறுர்களிம்மகட்குநிற்குங்கை
வந்தநற்கருமமென்வழங்குவாயென
விந்தனவாணன்யானிவளுங்கூலிநெற்
றந்தவர்க்குதவுவாராளத்தண்டுலம்.? (14)

ஆமெனினென்மனைக்கடைதிரோவெனக்
கோமகனன்றெனக்குறித்தெழுந்தனன்
றுமவார்குழலியுந்தனையர்தம்மொடுங்
தோமறுகுரிசில்பின்றொடர்ந்துபோயினள். (15)

ஆடகவணிகனுமவன்மனைக்கணோர்
வீடகங்கொடுத்திடவேந்தர்வேந்தனும்
பாடகமெல்லடிப்பதுமவாய்ச்சியுந்
தேடருமைந்தருஞ்சிறந்துவைகினர். (16)

வேறு.

வேலைநிலமும்பாதலமும்விண்ணேருலகும்விரிந்தபுகழ்ச்
சீலமுடையவருந்ததியிற்றெய்வக்கற்பிற்றிருவனையாள்
சாலும்வணிகன்பெரும்பதியிற்றையலார்கடருஞ்சாலிக்
கூலிபெறுவாடன்மையுமக்குமரர்செயலுங்கூறுவாம். (17)

அண்டருலகும்பாதலமுமாழியுலகுமளந்தொருகோல்
கொண்டவிசயத்தனித்திகிரிக்கோமான்கற்பிற்குலமனைவி
புண்டரீகப்பதங்தேயப்பொற்றாள்வருந்தக்காஞ்சேப்பப்
பண்டைவிதியாற்கூலிபெறச்சாலிதுவைப்பாள்பலநாளும். (18)

அமுதளாயமதிவதனம்வெயர்வாலழியவுள்ளழியு
முமியளாவுநெற்கொழிக்குமுன்னியெழுந்தவ்வுலக்கைபற்றுங்
தமியளாகிப்புலம்புறுமெய்த்தனயாருந்தத்தவிடளிக்குங்
குமுதவாயார்குழாங்காணின்முகம்பார்த்துரைக்கக்கூசுமால். (19)

சேனையாசன்பெருந்தவத்துச்செல்வப்புதல்வரிருவருமுன்
றூணைபிடித்தீர்த்திடச்சலித்துத்தள்ளுமெடுத்துத்தழீஇக்கொள்ளும்
பானல்விழிகணீர்ததும்பப்பலகாற்றுடைக்கும்பருமிதத்த
பீனமுலையாள்படிந்துயரம்யாரேகாணும்பெற்றியார். (20)

மையார்வரிதோய்மதர்நெடுங்கண்மடந்தைவணிகன்மனைமாட்டே
இவ்வாறிருந்துகூலிநெற்குற்றிநாளைதிர்ந்தவிகல்வேந்தர்



அவ்வானடையப்பொருகூர்ங்கோட்டலறுகாடக்கடாக்களிற்று
ணெவ்வாக்கானில்விறகெடுப்பதாதியாகவோதுவாம். (21)

வீரக்கழல்சேர்பூங்கழலில்விசித்தகருங்தோற்கழல்வனைந்து
பாரைப்பரிக்குஞ்செங்கோலைப்பரித்தகரத்தோர்கோலேந்தித்
தாரிற்பொலியுமுடியிலொருகொடியுந்தாங்கித்தமாமிகுந்
தூரக்கடன்மாநிலஞ்சுமந்ததோளால்விறகுஞ்சுமக்குமால். (22)

சாருந்துணைகள்யாவரொடுஞ்சாராதேகித்தனிசாரு
மாருஞ்செல்லாவனம்புகுதுமாங்கணொருசார்பமர்ந்திருக்கு
மூரும்பதியுமிகவெண்ணியுள்ளியுள்ளியுள்ளழியும்
பாரும்விசும்புமொருகுடைக்கீழ்ப்பரிக்கும்பாளிப்படைவேந்தே (23)

அகருவார...............வேங்கைகோங்கமாமலகந்
தகரங்குளிர்குங்குமந்திலகஞ்சரகஞ்சாதியிலவங்கம்
பகரும்பலவிந்தனம்பிறக்கும்பற்றிக்கொடியாற்சுமைசெய்யு
நிகரின்முடிமேற்றனியெடுத்துநடக்குநிற்குநிழல்காணில். (24)

ஏதினெடுங்கைத்திறல்வேந்தனினியவிறகுகொண்மினென
வீதிதோறும்போய்விலைகண்மேவாதென்னின்மீண்டேகுந்
தீதுமொழிகள்சிலர்சொல்லிற்செவிடர்போலச்சிரித்தேகு
மோதும்விலைபெற்றிடின்மடிமேலேற்குங்களிப்பினுடனெய்தும் ()

திறைநின்றரசன்றனக்குநிதிகொணருஞ்சேனைத்திறல்வேந்தன்
முறைகொண்டிசையமுடிமீதுமுடிந்துகிடந்தசெந்நெலுமா
யறைவண்டுகழ்ந்துதாதுழக்குமந்தார்முடிமேற்சிந்தாது
விறகுஞ்சுமந்துவருங்கோலங்கண்டாள்கமலமின்னன்னாள். (26)

மழவேறனையபெருந்திறலான்மறிபுந்திரைநீருலகேழு
நிழலாய்நின்றகவிகையானிடுபெய்காரத்தானேரார்தாள்
தொழவாழரசன்வருங்கோலங்கண்டாளுள்ளந்துண்ணென்றாள்
தழல்வாய்ப்பெய்தமெழுகென்னவுருகியினையசாற்றினள். (27)

வேறு.

பொன்னுமணியுநறும்போதும்புனைந்தரசர்
சென்னிவணங்குஞ்செறிகழற்காற்சேவகனே
மின்னுமுடிமேல்விறகுஞ்சுமப்பதுகண்
டின்னுமுயிர்கொண்டிருந்தேனேயேழையேன். (28)

அண்டருலகினுருப்பசியுன்னம்புயம்பாத்
துண்டமயலாற்றொடர்ந்தவுரவோனே
தொண்டையிதழாரத்தொனித்துவிறகுவிற்கக்
கண்டவிழியைக்கழியாதொழிவேனோ. (29)

புண்குடைந்து ...............பொன்னனையார்
கண்குடைந்ததோண்மீதுகாலசைக்குஞ்சாமரையோ
விண்குடையும்வெய்யோன்வெயின்மறைக்கமேன்மறைக்குந்
தண்குடையுமிந்தவிறகோதாரபதியே. (30)

என்றழுதுவிம்மியிரங்குமடமானைக்
குன்றனையதோளான்வருந்தலெனக்கூறி
முன்றமியேன்செய்தவினைப்பயனைமுன்னாதே
நின்றழுவதென்னேவிதியையெவர்நீக்குவார். (31)

கண்ணிருந்தநெற்றிக்கறையிருந்தகண்டத்துப்
பெண்ணிருந்தபாகன்பலிபொருகாற்பெற்றிலனோ
தண்ணிருந்தகஞ்சத்தலைவிதலைவனும்போய்
மண்ணிரந்தானென்றால்விதியையெவர்மாற்றுவார். (32)

என்னமடமயிலைத்தேற்றியிகல்வேந்தன்
பின்னும்விறகெடுப்பான்கானிற்பெயர்ந்திடலு
மன்னுதவத்தில்வந்தமக்களிருவோரு
மன்னையெமதையனெனுஞ்சொல்லுதும்யாமென்றறைந்தார். (33)

வேண்டலெனவன்னைவிலக்கவுந்துங்கேளாமல்
மாண்டவாசன்றனைத்தொடர்ந்தமைந்தர்தமை
யாண்டகையுமக்களழாதேயருகணைத்துத்
தீண்டரியகானகத்துச்சென்றான்விறகெடுப்பான். (34)

மன்னர்தொழுங்கழற்கான்மன்னவனுமைந்தருமாய்ப்
பின்னும்விறகெடுப்பான்கானிற்பெயர்ந்திடலு
மின்னனுழந்து தனியேயிருந்தயருங்
கன்னியருந்ததியின்றன்மையினைக்கட்டுரைப்பாம். (35)

சந்திரகிரிப்படலம் முற்றும்.

உதவிப்பத்திராதிபர்.

உ

# கோனசீமைத் திராவிடப்பிராமணர்கள்.*

"சான்றோர்கவியெனக்கிடந்த கோதாவரி" அரபிக்கடலின் அண்மையின்கட்டோன்றி, இன்றளவும், "புவியினுக்கணியாய்ப் புலத்திற்றாகிப்" பல நாடும் காடும் மலையும், எழுநூறுமைல்நீளம்கிடந்து, தன் பெயர்கொண்டஜில்லாவில்நுழைந்து, ராஜமகேந்திரத்துக்கண்மையிலுள்ள தௌளேஷ்வரத்திற் பலபடப்பிரிந்து, "அவியகத்துறைகள் தாங்கி, ஐந்திணைநெறியளாவிச் சவியுறத்தெளிந்து, தண்ணென்றொழுக் கந்தழுவி" வங்காளக்கடலிற் கலக்கின்றது. அது மழைகாலங்களில் ஒருநிமிஷத்துக்கு மூன்னூறுலக்ஷம் கனஅடி ஜலத்தைப் பெருக்கிக் கொண்டுசெல்லுகிறதாம்; அதாவது மிகப்பிரசித்திபெற்ற லண்டன்வழியாய்ஓடும் தேம்ஸ்நதியிற்செல்லும் நீரைப்பார்க்கிலும் இருநூறுபங்கு மிகையென்றும், ஈஜிப்டுதேசத்தில் ஓடும் நீலநதி, கெய்ரோநகரத்துக்குக்கொண்டுவரும் ஜலத்தைப்பார்க்கிலும் மூன்றுபங்கு இது பெரிதென்றும் கணக்கிடப்பட்டிருக்கின்றது. நம் இந்தியாவில், கங்கைநதிக்கும் ஸிந்துநதிக்கும் மகிமையில் அடுத்ததாகச்சொல்லப்படுகிறது. இவ்வளவுபெருமையுற்ற கோதாவரி, தௌளேஷ்வரத்திற் கிழக்குப்பக்கமாகக் கௌதமிகோதாவரியென்றும், மேற்குப்பக்கமாக, வஸிஷ்டகோதாவரியென்றும் பிரிந்துசெல்லுகின்றது. இவ்விரண்டுக்கும் நடுவேயுள்ள பூமி, அமலாபுரம் என்றும், நகரம் என்றும் இரண்டு தாலூகாக்களாக ஏற்பட்டிருக்கின்றது. அவற்றுள், முன்னது, பாஞ்சாலநாடென்றும் "கோனசீமை" யென்றும், வழங்கப்படுகிறது. கோன என்பது, தெலுங்குபாஷையில் "முடிவு இறுதி" எனப் பொருள்படுமாம்; ஆகவே, 'கோனசீமை' என்பதனைக், கடைத்தலம் என்று கொளல் வேண்டும். கோதாவரி கடைசியாகப்புகும்சீமை யதுவேயாதலின். இக்கோனசீமையில், "பேரூர்" என்று ஒரு கிராமம் உளது. அதில் இக்காலத்தில் வசித்துவரும் ஐந்நூறுவீட்டுக்காரர்கள் "கோனசீமைத் திராவிடர்கள்" என்று சொல்லப்படுகிறார்கள். அவர்களைப்பற்றித் தெரிந்த சிலவரலாறுகளை ஈண்டு எழுதியுள்ளேன்.

இவர்கள் எந்தக்காலத்தில் இந்தஜில்லாவிற் குடியேறினார்கள் என்பது தெரியவில்லையாம்; ஆனால் அவர்கள் ஆயிரம்வருடங்களுக்குமுன்

* இது மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் இருபத்தோராம்வருடக்கொண்டாட்டத்திற் படிக்கப்பட்டது.

வந்திருக்கலாமென ஊகிக்கப்படுகிறது. அவர்களில் ஒருவருடன் நான் உரையாடிக்கொண்டிருந்தபொழுது அவர்கள் "முப்பது தலைமுறைக்கு முன், இவ்விடம் குடியேறினதாகக் கேள்வி" என்று அவர் சொன்னார். அதாவது, ஒருதலைமுறைக்கு முப்பது வருடம்வீதம் கணக்கிட்டுப்பார்த்தால், தொள்ளாயிரம்வருஷமாகின்றது. ஆகவே, பதினோராம்நூற்றாண்டில் அவர்கள் இவ்விடத்துக்கு வந்திருக்கலாம். அக்காலத்திற்றான், தஞ்சையைப் பிரதானமாகக்கொண்டு, சோழசாம்ராஜ்யத்தை நிலைநாட்டிய மகா புஜபலபராக்கிரமசாலியான முதல்ராஜராஜன் குணதிசைச் சாளுக்கியமன்னன்மேல் 999ல் படையெடுத்து, அவனைத் தோற்கடித்துத் தன்கொடியைக் கோதவரிவரை பறக்கச்செய்தான். பின்னர் அவனது புத்திரன் ராஜேந்திரசோழனும் (1011—44) படையெடுத்துத் தன்கொடியைக் கஞ்சம்ஜில்லாவிலுள்ள மகேந்திரகிரியில் ஒரு ஜயஸ்தம்பத்தில் நாட்டினானும். இன்னும், 1095—96ல், குலோத்துங்கசோழன் (முதலாமவன்) கலிங்கத்தின்மேற் படையெடுத்தான். இம்மன்னர்கள் யாரேனும் ஒருவர்காலத்தில் இக் கோனசீமைத்திராவிடர்கள் குடியேறியிருக்கலாம்.

வடமர்களில் ஏழுகோத்திரத்தைச்சேர்ந்தவர்களும், பிரஹச்சரணர்களில் ஐந்துகோத்திரத்தைச்சேர்ந்தவர்களுமாகிய பதினைந்துகுடும்பத்தார்கள் ஆதியிற் கும்பகோணத்துக்கடுத்த வலங்கைமான்கிராமத்திலிருந்து, இக் கோதாவரிப்பக்கம் வந்தார்களாம். முதலாவது, இவர்கள், வஸிஷ்டகோதாவரிக்கரையிலுள்ள ராலி என்னும் கிராமத்தில் தங்கினார்களாம்; ஆனால் அனேக இடர்ப்பாடுகள் உண்டாயினவாம். ஆதலினாலே அவ்விடத்தைவிட்டகன்றனராம். பிறகு ஒரு ராஜாவின் அனுமதியின்பேரில், ஒருயானை குறிப்பிட்ட ஒருகாலத்தில் எவ்வளவுதூரம் செல்லுமோ அவ்வளவுபூமியைத் தங்களுக்கு உரித்தானதாகக்கொண்டார்கள். அதுவே இக்காலத்தில் பேரூர் என வழங்குகிறது. அவர்கள் ஒருதரம் ராலி என்னும் ஊரில் இருந்ததற்கு அடையாளமாக, இன்றும் அவ்வூரில் ஒருவீதி "அரவவீதி" (தமிழர்வீதி) என வழங்கப்படுகிறதாம்.

அவர்கள் பேரூரில் தங்கிக் கிராமநிர்மாணம்செய்ய ஆரம்பித்தார்கள். சோழதேசத்தில் தங்களுக்கு அனுபவமாகவுள்ளகிராமங்களிற்போலவே, இங்கேயும் வீதிகளையும் துறைகளையும் கட்டினார்கள். தெருக்



களும் சந்துகளும் அப்படியே அமைந்தன. இப்பொழுதும் சோழநாட்டுத் தஞ்சாவூரானொருவனைக் கண்ணைக்கட்டித் திடீரென அவனை இப் பேரூர்க்கிராமத்தின்மத்தியில் விட்டுவிட்டால், அவன் அதைத் தன்னூர் என்றே சாதிப்பான் என்று தெரிந்தோர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் நாளடைவில் தங்கள் சுயபாஷையை அறவே மறந்து தங்கள் சுவீகாரபாஷையையே உபயோகித்துவருகிறார்கள். நாட்பட நாட்பட அவர்கள் எண்ணிக்கையில் விருத்தியானார்கள். பலர் இவ்வூரைவிட்டு இன்னும் அயலிடங்களுக்குப் பரவலானார்கள். கஞ்சம், விசாகபட்டணம் ஜில்லாக்களில் இவர்கள் மரபினர்கள் "பேரூர்த்திராவிடர்கள்" என வழங்கப்படுகிறார்களாம். இவர்கள் "அரவவாடு" (தமிழர்) ஆனதினாலே, ஆந்திரர்கள் இவர்களை அவ்வளவாகநேசிப்பதில்லை என்று சொல்லப்படுகிறது. இற்றைஞான்று சென்னையிற் பெரியவக்கீல்களாகவிளங்கும், பெரி நாராயணமூர்த்திகாருவும், கண்டி லக்ஷ்மண்ணகாருவும் இவ்வகுப்பைச்சேர்ந்தவர்களாவர்.

இனி, வஸிஷ்டகோதாவரிசங்கமமாகும் இடத்தில், "அந்தர்வேதி" என்ற திவ்வியவைஷ்ணவக்ஷேத்திரம் ஒன்று உளது. அதில் திருக்கோயில்கொண்டிருக்கும் சுவாமி, லக்ஷ்மீநரசிம்மஸ்வாமியாகும். இவ்விடத்தில் வஸிஷ்டருடையவேண்டுகோளின்பேரில் அஸ்வருடாம்பாள் என்னும் அம்மன் உதவிகொண்டு, நரசிம்மஸ்வாமி ரக்தவிலோசனன் என்னும் மகா அசுரனையும் கொன்றனராம். இந்தக்ஷேத்திரத்தில் மகமாசத்தில், சுவாமியின் திருக்கல்யாண உத்ஸவம் நடக்கும்வழக்கம் இருந்துவருகிறது. அது ஒருவாரஉத்ஸவமாகும். சாதாரணமாக எண்பதினாயிரம் ஜனங்கள் அந்தக்காலத்தில் அங்கு தரிசனத்துக்காகக் கூடுவார்கள். இந்தக் கோதாவரிஜில்லாவில் நடக்கும் பெரியஉத்ஸவம் அதுவே.

இந்த உற்சவகாலத்தில் "பேரூர்க் கோனசீமைத் திராவிடப்பிராமணர்"களுக்குப் பெரிய மரியாதை காட்டப்படுகிறது. முன்னொருகாலத்தில், நரசிம்மசுவாமியின் ஸ்ரீ.சக்ரம், சமுத்திரத்திற் புகுந்து மறைந்துவிட்டது. சுவாமியின்பக்தர்கள், பலபாடுபட்டும், கிடையாமல் தவித்தனர். அச்சமயத்தில், பேரூர்த் திராவிடப்பிராமணர் ஒருவர், தமது மந்திரசக்தியினாலே அச்சக்கரத்தைச் சமுத்திரத்தினின்றும் வெளிப்படுத்தி, அந்தர்வேதிவைஷ்ணவர்களுக்கு அளித்தனராம். அந்தநாட்கொண்டு அவ்வைஷ்ணவர்கள், பேரூர்த் தமிழ்ப்பிராமணர்மரபினர்களுக்குத் தங்கள் மனமுவந்த நன்றிமறவாமையைக் காட்டிவருகிறார்கள்.

திருக்கல்யாணஉற்சவகாலத்தில் உள்ளூர்வைஷ்ணவர்கள் மாப்பிள்ளைவீட்டுக்காரர்கள்போலவும் பேரூர்த்தமிழ்ப்பிராமணர்கள், பெண்வீட்டுக்காரர்கள்போலவும், பாவிக்கப்பட்டுவருகிறார்கள். உற்சவத்துக்கடைநாளுக்குமுதனாள், இத்தமிழ்ப்பிராமணர்கள், வைஷ்ணவதிருநாமங்களைப்போட்டுக்கொண்டு, கல்யாணகாலங்களில் சம்பந்திமார்கள் சம்பந்திப்

பாட்டுப் பாடுவதுபோல, அவ் வைஷ்ணவர்களைப்பற்றிப் பல ஏச்சுப் பாட்டுப் பாடுவார்களாம். அத் தலைவைஷ்ணவர்களும் இவை யெல்லா வற்றையும் பொறுமையுடன் சகித்துத் தங்களது என்றும் நன்றி மறவாத்தன்மையை வெளியிட்டுவருகிறார்களாம்.

இன்னும், இரண்டாம்நாள், சுவாமியின்ரதம் ஊர்வலம்வருவது வழக்கம். விஜயவருஷத்தில் (அதாவது 1893–94ம் வருஷத்தில்) வழக்கம் போல் ஜனங்கள் ரதம்இழுக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் எவ்வளவோ சிரமப்பட்டுப்பார்த்தும் அதை இழுக்கமுடியவில்லை. காரணத்தைவிசாரிக்கும்பொழுது, பேரூரிலிருந்து ஒருதமிழ்ப்பிராமணனும் அவ்விடம் வாராததைக்கண்டு, அதுவே காரணமாக இருக்குமென்று ஊகித்தார்களாம். உடனே அந்தஊருக்குத் தக்கமனிதர்களை அனுப்பி, அவ்விடமிருந்து சிலரைக் கூட்டிக்கொண்டுவந்து, ரதத்தின்கயிற்றைத்தொட்டு இழுக்கும்படி அவர்களை வேண்டிக்கொண்டார்கள். உடனே ரதம் இழுபட்டதாம். அன்றுதொட்டு இவ்வுற்சவகாலத்தில், அந்தர்வேதிக் கோவில்விசாரணைக்கர்த்தாக்கள் முதலிலேயே பேரூரிலிருந்து சில திராவிடப்பிராமணர்களை அழைத்துவைத்துக்கொள்ளுகிறார்களாம்.

நம்மவர்களுக்கு இச்சம்பவத்தில் நம்பிக்கையில்லாமலிருக்கலாம். ஆயினும் எனக்குத்தெரிந்த வேறு ஒருசம்பவத்தைச் சொல்லி இவ்விஷயத்தை முடித்துவிடுகிறேன். ஐந்துவருஷங்களுக்குமுன் பிரசுரமான திருநெல்வேலிஜில்லா கேஜட்டியரில் 469ம் பக்கத்திற் பின்வரும் விவரம் காணப்படுகிறது. தென்காசிப்பட்டணத்திற் பல சதிக்கல்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஆறுகற்கள் தென்காசிரயில்வேஸ்டேஷனில் வைக்கப்பட்டிருக்கின்றன. இவை ரயில்பாதைபோடும் இடத்தில் முதலில் இருந்தன. வேலையாட்கள் அவைகளை அப்படியேபாதைக்கடியில் தோண்டிப் புதைத்துவிட்டார்கள். 1903ம் வருஷத்தில் செங்கோட்டைவரைக்கும், முதலாவதாக ரயில்வண்டித்தொடர்சென்றபோது தென்காசியில், இந்தஇடத்தைத்தாண்டி, வண்டித்தொடர் நகரமுடியாமற்போய்விட்டதாம். என்னசெய்தும் பயனபடவில்லை. கடைசியில் அச் சதிக்கல்களை மறுபடியும் தோண்டிஎடுத்து வெளியில்வைத்தபிறகுதான், வண்டித்தொடர் அவ்விடத்தைவிட்டு அசைந்ததாம். அக்கல்களை நாம் கவனியாவிட்டாலும், அவைகளை அவமரியாதைபண்ணித் துன்பப்படுத்தக்கூடாதாம். இது ஸ்ரீமான் பேட் துரை எழுதியுள்ளது.

குறிப்பு :— கோனசீமைத்திராவிடர்களைப்பற்றி ஏற்கனவே தமிழ்நூல் எவற்றிலாவது காணப்பட்டிருந்தாலும், அல்லது தமிழறிஞர்கள் தெரிந்திருந்தாலும், அதனைச் செந்தமிழ்வாயிலாக அறிவிக்குமாறு வேண்டுகிறேன்.

K. C. வீரராகவையர்.

ஸ்ரீ:

# பிந்துமதி.

பிந்துமதியென்பது சித்திரக்கவிமாலையுள் ஒருவகையின்பாற்படும். அது பிந்துவையுடையதாயிருப்பதெனப் பொருள்படும். பிந்து புள்ளியென்பன ஒருபொருட்சொற்கள்.

தமிழ்மொழியிற் புள்ளிபெறுவன உயிரெழுத்துக்களுள் எகர ஒகரங்களும் ஏனைய மெய்களு மாகும்.

"மெய்யினியற்கை புள்ளியொடு நிலையல்"
"எகர வொகரத் தியற்கையு மற்றே" என்பது தொல்காப்பியம்

இதற்கிணங்கவே நன்னூலாரும்,—

"தொல்லை வடிவின வெல்லா வெழுத்துமாண்
டெய்து மெகர மொகரமெய் புள்ளி" என்று கூறினர். நன்னூல்

மயிலைநாதருரையேட்டுப்பிரதிகளிற் பழமையுற்ற சிலவற்றில் உயிரும் உயிர்மெய்யுமாகிய எகரவொகரங்கள் புள்ளியுடன் வரையப்பெற்றிருந்தன என்னும் அப்பதிப்பின் முகவுரைவாக்கியங்களும் இதனைத்தெளிவுறுத்தும். ஆகவே பண்டைக்காலத்து எகர வொகரங்களும் புள்ளியுடன் வழங்கியமை போதரும். ஆயினும் அஃதிக்காலத்தில் வழக்கொழிந்த தன்காரணம் புலப்படவில்லை.

இது நிற்க; சித்திரக்கவிகளுள் ஒன்றாகிய பிந்துமதி யென்பது புள்ளியுடையனவாய எழுத்துக்களானே யமையச்செய்யும் செய்யுளாமென்பது முன்னரே கூறப்பட்டது. யாப்பருங்கலநூலிலே, "மாலைமாற்றே சக்கரஞ் சுழிகுளம்" என்னுஞ் சூத்திரத்துள், "வடநூற்கடலுளொருக்குடன் வைத்த வுதாரணநோக்கி, விரித்து முடித்த மிறைக்கவிப்பாட்டு" என வருகின்றது. ஆண்டு விருத்தியுரைகாரர், "ஆரியமென்னும் பாரிரும் பௌவத்துக் காட்டிய அக்கரச்சுதகமும், பிந்துமதியும், பிரேளிகையும் முதலாகவுடையனவும் இப்பெற்றியே தமிழாகச் சொல்லு மிறைக்கவிகளும் அறிந்துகொள்க" என வுரைகூறி அவை ஒவ்வொன்றிற்கும் உதாரணங்களுங் காட்டிச்சென்றனர்.

இனி, இஞ்ஞான்று வெளிப்போந்துலவாநின்ற யாப்பருங்கல விருத்தியுரைப்பதிப்பின்கண்ணே அவ்வுதாரணங்களிற் சில வழுவினுட்பட்டுக் கிடக்கின்றன.

அவற்றுளொன்று, மாத்திரைச்சுதகத்துக் குதாரணமாகற்பாலது 'இது, பிந்துமதி' என்னுங் கீழ்க்குறிப்போடு காணப்படுவதாகும். உரையுள் மாத்திரைச்சுதகத்துக்கு மூன்றுதாரணங்கள் காட்டப்பட்டன. அவை,—

"வாம மணிமே கலையார் மயிர்குறுகி
னுமவர் பெய்யு மணி"

"வண்ணத்தி னென்றேதி மாத்திரையிற் குன்றுமேற்
கண்ண னுமிழ்ந்த பொருள்"

"மயிர்நிறுவி மற்றதற்கோர் புள்ளி கொடுப்பிற்
செயிர்தீர் மாமாகுஞ் சென்று" என்பன.

ஆனால், அச்சுப்புத்தகத்தில் முன்னவையிரண்டையும் உள்ளவாறு பதித்து, "இவை மாத்திரைச்சுதகம் அளவுச்சுருக்கமெனவும் அமையும்; கூழை, குழை, நீலம், நிலம் எனக் கொள்க" என்ற உரைவாக்கியத்தை அவற்றையடுத்து அமைத்தும், மூன்றாவதான 'மயிர்நிறுவி' எனவரும் அடிகளை யவற்றின்கீழ்ச்சிட்டு, "இது பிந்துமதியென்பது, ஒதி, ஓதி" என்னும் பிழைபட்ட உரைவாக்கியத்தைப் பொருத்தியும் காட்டப்பட்டிருக்கிறது.

ஈண்டு, "மயிர்நிறுவி மற்றதற்கோர் புள்ளி கொடுப்பிற், செயிர்தீர் மாமாகுஞ் சென்று" எனவரு மடிகள் பிந்துமதிக்குக் காட்டாதவில்லை. அஃதெங்ஙனமெனிற் கூறுவேன். ஓதி யென்னும் மயிர்ப்பெயரை நிறுவி ஓகாரத்திற் புள்ளி கொடுக்க அது ஒதியென மாத்திரையிற் சுருங்கி ஒருவகை மரத்தின்பெயராகு மென்பதே அதன்பொருள். எனவே அது மாத்திரைச்சுதகம்; அல்லது அளவுச்சுருக்க மெனப்படுவதன்றிப் பிந்துமதியாகுமா றில்லை. ஆகவே யவ்வடிகளின்கீழ், 'இது பிந்துமதி' என்றிருப்பதை நீக்கி மாத்திரைச்சுதகத்துக்குக் காட்டிய மற்றையிரண்டுதாரணங்களோடும் சேர்த்துப் படித்துக்கொள்ளவேண்டும். மாத்திரைச்சுதக மெனினும் மாத்திரைச்சுருக்க மெனினு மொக்கும். தண்டியலங்கார நூலிலே மாத்திரைச்சுருக்க மேற்கோளாக வுள்ள,—



"நேரிழையார் கூந்தலினோர் புள்ளிபெற நீண்மரமாம்
நீர்நிலையோர் புள்ளி பெறநெருப்பாம்" என்பதையும் நோக்க இத்திருத்தம் வலிபெறுவதாகும்.

இஃதன்றியும், "ஒன்றொழிபொதுச்சொல்" என்னு நன்னூற் சூத்திரத்து, 'இன்னபிறவும்' என்பதனுரையில், மயிலைநாதர்,—

"வாம மணிமே கலையார் மயிர்குறுகி
னுமவர் பெய்யுமணி குழை—ஏம
மயிர்நிறுவி மற்றதற்கோர் புள்ளி கொடுப்பிற்
செயிர்தீர் மாமாகுஞ் சென்று"

என் றொருசெய்யுளை யெடுத்தோதி, "கூழை, குழை, ஓதி, ஒதி இவ்வாறு மாத்திரைச்சுருக்கமாய்வருவனவும், இன்னபிறவும் குறிப்பாற் பொருளுணர்த்துவனவாமெனக்கொள்க" எனவும் உரைகூறிப்போந்தார். ஆதலின் 'மயிர்நிறுவி' யென்னுமடிகளா லுணர்த்தப்பட்ட 'ஓதி, ஒதி' என்பது மாத்திரைச்சுதகத்துக்குக் காட்டாவதன்றி எவ்வாற்றானும் பிந்துமதியாகாதென்ப தினிது விளங்கிற்று.

இனி மயிலைநாதர்காட்டிய இச்செய்யுள்தானே யாப்பருங்கல விருத்தியுரையுள் இரண்டாகப்பிரிக்கப்பட்டதன்காரணம் அறியக்கூடவில்லை. இங்குள்ளவாறே அவ்விடத்தும் அவற்றை ஓரேசெய்யுளாகத் திருத்திப்படித்தலும் தகுதியுடைத்தாகும்போலும்.

இவையொருபுறமிருக்க யாப்பருங்கலவிருத்தி யச்சுப்புத்தகத்திலே,

"நெய்கொண்டேன் நெற்கொண்டேன் எட்கொண்டேன் கொட்கொண்டேன்
செய்கொண்டேன் செம்பொன்கொண்டேன்."

"எல்லாவெழுத்தும் புள்ளியுடையனவே வந்தமையால் இதுவும் பிந்துமதி" என்று காணப்படுகிறது. இதனுள், 'எல்லாவெழுத்தும் புள்ளியுடையனவே வந்தமையால்' என்று கூறியிருப்பது மேற்கோளாகவுள்ள அடிகளை யச்சிட்டிருக்குமுறையோடு பொருந்துமாறில்லை. என்னை? 'நெய்கொண்டேன்' என்பதில், எகர வொகர மெய் புள்ளிபெய்து மென்பதற்கேற்ப நெ, கொ இவ்விரெழுத்துக்களும் புள்ளியுடையனவாகக் கருதப் பெறுமேயெனினும் அதிலுள்ள ஈற்றயலாகிய 'ஏகாரம்' புள்ளி

யுடையதாகாமையி னென்பது. அது 'நெய்கொண்டேன்' என்றிருக்கிற் பொருந்தும். மேலுள்ளனவற்றிற்கு மிங்ஙனமே கொள்க. கொள்ளவே அவ்வடிகள்,—

"நெய்கொண்டே னெற்கொண்டே னெட்கொண்டேன் கொட்கொண்டேன்
செய்கொண்டேன் செம்பொன்கொண்டேன்."

என்று திருத்தப்படுதல்வேண்டும். இத்திருத்தமான பாடம் பெரியோரான் முன்னரே மேற்கொள்ளப்பட்டதென்பதை நன்னூல் மயிலைநாதருரைப்பதிப்பின்முகவுரைநோக்கி யுணர்க. அன்றியும், அவ்வுதாரணத்தின்கீழ்க் குறிப்பிட்ட 'இதுவும் பிந்துமதி' என்னும் உரைவாக்கியத்தின்கண்ணுள்ள உம்மை நீக்கற்பாலதாகும். ஏனெனில் உம்மையாற்றழுவிக்கோடற்குப் பிந்துமதிக்குக்காட்டிய உதாரணம் வேறொன்றில்லையாகலினென்க.

இத்துணையும் மாணாக்கரிடர்ப்பாடுநோக்கி ஈண்டு வெளியிடலாயிற்று.

T. N. அப்பனையங்கார்,
மதுரை.

---

௨

# வடமொழி முதுமொழியன்று?

வடமொழியே எம்மொழிகட்கும் முதுமொழியென்று பல ஆன்றோர் கூறப் பல ஆன்றோர் அவ்விருமொழியு மொரேகாலத்தன என்றும், இரண்டற்கு மிலக்கணஞ் சொன்னவரு மொருவரே என்றுங் கூறுகின்றார்கள். இற்றைக்கு ஐயாயிரமாண்டுக்குமுன்னிருந்தவராகிய திருமூலரும்,

"மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின்
றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்
தாரியமுந் தமிழு முடனே சொலிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே" எனவும்,



"அவிழ்கின்ற வாறு மதுகிட்டு மாறுஞ்
சிமிட்டலைப் பட்டுயிர் போகின்ற வாறும்
தமிழ்ச்சொல் வடசொ லெனுமிவ் விரண்டும்
உணர்த்து மவனை யுணர்த்தலு மாமே"

எனவுங் கூறினர். கம்பரும்,

"உழக்குமறை நாலினு முயர்ந்துலக மோதும்
வழக்கினு மதிக்கவினி னும்மரபி னாடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கட்
டழற்புரை சுடர்க்கடவு டந்ததமிழ் தந்தான்"

எனக் கூறுவர். சிவஞானசுவாமிகளும்,

"இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவ ரியல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்த ரியல்வாய்ப்ப
இருமொழியு மான்றவரே தழீஇயினா ரென்றாலிவ்
விருமொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ"

எனக் கூறுவர். சங்கச்சான்றோராகிய நரிவெரூத்தலையாரும்,

"இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு
முன்பறியச் சொன்ன முதுமொழிநூன்—மன்பதைகட்
குள்ள வரிதென் றவைவள் ளுவருலகங்
கொள்ள மொழிந்தார் குறள்"

எனக் கூறுவர். (முதுமொழி—வடமொழி) இங்ஙனமெல்லாம் நம் சங்கச்சான்றோரும் மற்றைச்சான்றோரும் மொழிந்திருப்பவும், வவுனியவிளாங்குளத்து இராஜையனார் என்பவர் தமிழபிமானங்கொண்டு தாமுஞ் சில வடமொழிப்பகைஞர்போற் றேன்றி, வடமொழி பிற்காலத்துமொழி என்று இரண்டேயிரண்டேதுக்கொண்டு சென்ற ஆவணிமாதச் செந்தமிழ்ப்பத்திரிகையில் "தமிழ்மொழிக்கு வடமொழி செவிலித்தாயாகுமா? என்னும் விஷயத்தினகத்தே யுரைத்தார். அவர் உரைத்த அவ்வேதுக்களிரண்டும் அவர்கருத்தை நிலைநிறுத்த வல்லனவோவென ஆராய்வாம். அவர்காட்டிய வேதுக்களிரண்டும் வருமாறு:—

க. எழுத்துச்சாரணமுறையை நோக்குமிடத்து வடமொழி பிற்காலத்து மொழியாதல்.

உ. வடமொழி எழுத்தில் வழங்கிய பாஷையன்றிப் பேச்சில்வழங்கியதன்மை.

இவ்விரண்டனுள்ளும், உச்சாரணமுறையைநோக்குமிடத்து வடமொழி பிற்காலத்துமொழியாதல் என்னு மேதுவை முதல் ஆராய்வாம்.

க. எழுத்துக்களுள், ட், ண், ர், ல், ழ், ள், ற், ன், என்னு மெட்டெழுத்துக்களும், நா மேலண்ணத்தைச் சென்றுதொடும் முயற்சியாற் பிறப்பனவாதலிற் சிறுவரா லுச்சரிக்கப்படாதன எனவும், அதனல் அவை மொழிமுதலிற் றேன்று எனவும், படைப்புக்காலத்து முற்பருவத்தே தோன்றிய மனுஷர் சிறார்க்கு ஒப்பாவர் என்றும், அதனாற்றான் அவர்கள் தோற்றுவித்தபாஷையிலே, அவ்வெட்டெழுத்துக்களும் மொழிக்கு முதலாகாவாயின என்றும், பிற்பருவத்திலுள்ள மனுஷராற் றோற்றுவிக்கப்பட்டபாஷையாதலின் வடமொழியிலே ட, ற முதலியன மொழிக்கு முதலாக வருகின்றன என்றும் இராஜையனுர் உரைத்தார். அங்ஙனமாயின், அவர்கூறியவாறு, நா மேலண்ணத்தைச்சென்றுதொடுதலாற்பிறக்குமெழுத்தெல்லாம் சிறுவரா லுச்சரிக்கப்படாதனவாயும், மொழிக்குமுதலாகாதனவாயு மிருத்தல்வேண்டும். அங்ஙியதிதவறி, நா மேலண்ணத்தைச்சென்றுதொடுதலாற்பிறப்பனவாய இ, ஈ, எ, ஏ, ஐ, த, ந முதலியன சிறுவரா லுச்சரிக்கப்படுவனவாயும், மொழிக்கு முதலாவனவாயும்வருதலானும், மொழிக்குமுதலாவனவற்றுள்ளும் சகர யகர வகர ஞகரங்கள் சிலவுயிர்களோடு மொழிக்குமுதலாகாமையானும் மொழிமுதலாதற்குக்காரணம் பிறிதொன்றுவதன்றி உச்சாரணமுறையன்று என்பதே தேற்றம். அன்றி, உச்சாரணமுறையே காரணமேனும், படைப்புக்காலத்தின் முற்பருவத்தேதோன்றியமனுஷருக்குச் சிறுரையும், பிற்பருவத்தேதோன்றியமனுஷருக்கு முதியோரையும் உவமை கூறல் பொருந்தாது. என்னை? முற்பருவத்துமனுஷரினும் பிற்பருவத்து மனுஷர் அறிவு மாற்றலுங் குறைந்தவர்களாதலின். அஃறேல், அவர் அதற்குத் திருட்டாந்தங்காட்டல்வேண்டும். சங்கப்புலவர்களைப் போலச் செய்யுள்செய்யவல்லவரொருவரை அவர்கள்காலத்தின்பின் இருந்தவராகக் காட்டுவாரா? கம்பர் காளிதாசர்களைப்போலக் கவியியற்றவல்லவரொருவரை அவர்கள்காலத்தின்பின் இருந்தவராகக் காட்டுவாரா? தொல்காப்பியரைப்போல இலக்கணஞ்செய்யவல்லாரொருவரை அவர் காலத்தின்பின் இருந்தவராகக் காட்டுவாரா? பரிமேலழகரைப்போல



உரையுரைக்கவல்லாரை அவர்காலத்தின்பின் இருந்தவராகக் காட்டுவாரா? காட்டல் கூடாதன்றே? அங்ஙனமாக இராஜையனுருக்குத் திருட்டாந்தமு மின்றே. ஆதலின், இராஜையனுர் தாங்கூறிய உவமையை மாறிக் கூறிற் பொருந்துமன்றி மற்றுப் பொருந்தாதென்க.

மனுஷர் அறிவி னு மாற்றலினு மிகுங்காலத்தை உற்சர்ப்பிணி என்றும், குறையுங்காலத்தை அவசர்ப்பிணி என்றும் நூல்கள் கூறும். சங்கச்சான்றோராகிய நரிவெரூத்தலையார் கூறிய "இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு—முன்பறியச் சொன்ன முதுமொழிநூன்—மன்பதைகட்—குள்ள வரிதென்று" என்னுஞ் செய்யுளுக்குத் திருத்தணிகைச் சரவணப்பெருமாளையர் உரைத்த உரையிலே "முன்பறியவெனவே உற்சர்ப்பிணியாகலின் அக்காலத்தோர்க்கு உணர்தற்கேற்ற ஆயுணீட்சியும், உணர்வுவலியு மிருந்தன வென்பதூஉம், அவசர்ப்பிணியாகலின் இக்காலத்தோர்க்கு அவையில என்பதும் பெறப்பட்டன என உரைத்ததும், பிற்காலத்தோர் அறிவு மாற்றலுங் குறைந்தவர்களென்பதை வலியுறுத்தும். இன்னும் முன்னூல்கள் கடினமானவையாதலின், அவைகள் மெல்லியமொழிகளாலாக்கப்படல்வேண்டுமென்றும், செய்யுணூல்களெல்லாம் வசனநூல்களாக ஆக்கப்படவேண்டுமென்றும் பலர் இப்போது விரும்புவதும் இக்காலம் அவசர்ப்பிணி என்பதை வலியுறுத்தும். ஆதலின், அவர்கூறிய சொல்லுச்சாரணமுறையென்னும் ஏதுச் சிறிதும் பொருந்தாது என்க.

இனி அவர்கள்கூறிய இரண்டாவது ஏது வடமொழி ஒருதேயத்தாலேபேசப்பட்டுவந்தபாஷையன்று என்பது. அதனை நாமும் ஒப்புக்கொள்ளுகின்றும். வடமொழி தேவபாஷையன்றி மனுஷபாஷையன்மையின், ஒருதேயத்தாராலே பேசப்பட்டுவந்ததன்றாயிற்று. அற்றேல், அதனை வடமொழி என்றதென்னையெனின், வடக்கின்கணிருந்து ஆரியர்களாலே பரிபாலிக்கப்பட்டு அத்திசைக்கண் வளர்ந்தமையானென்பது. கம்பரும் "தேவபாடையி னிக்கதை செய்தவர் மூவர்" என வடமொழியைத் தேவபாடையெனக் கூறுதல் காண்க. இங்ஙனமே சரவணப்பெருமாளையரும், ஷை செய்யுளுரையில், "தேயவழக்கிற்படாததூஉம், வருந்திக்கற்போர்க்குமாத்திரம் புலப்படுவதுமாய் எல்லா மொழிகட்கும்முற்பட்டுக் கடவுண்மொழியாய்நிற்றலின் 'முதுமொழி' என்றார்" என்றும், சிவஞானமுனிவரும், "தென்றமிழ்க்கெதிரியது

கடவுட்சொல்லாகிய ஆரிய மொன்றுமே" யென்றும், "ஆரியச்சொல் எல்லாத்தேயத்திற்கும் விண்ணுலகமுதலியவற்றிற்கும் பொதுவாக லான்" என்றும், "வடசொல் என்றது ஆண்டுப் பயிற்சிமிகுதிபற்றி" என்றும், சேனாவரையரும் "வடசொற்கிளவி" என்னுஞ் சூத்திரவுரையில், வடமொழி எல்லாத்தேயத்திற்கும் பொதுவாகலானும் என்றும் கூறுதலானும், சங்கச்சான்றோராகிய வெள்ளிவீதியாரும், "செய்யாமொழி" எனக் கூறுதலானும், அஃது நூல்வழக்கில் வந்த பாஷையன்றி, ஒருதேயத்தாராலே பேசப்பட்டுவந்த பாஷையன்மை யறிக. ஆதலின், அவர்கள் கூறிய மற்றைய ஏதுவும் பொருந்தாமை யறிக.

இங்ஙனம் இராஜையனர் காட்டிய இரண்டேதுவும் பொருந்தாமை யின் அவர் இவற்றை ஏதுவாகக்கொண்டு வடமொழியைப் பிற்காலத்து மொழி என்றதூஉம் பொருந்தாது, பயனில்கூற்றும் அபிமானம்பற்றிக் கூறியகூற்றுயும் முடிந்தவாறு காண்க.

இன்னும், வடமொழி முதுமொழி என்பது இராஜையனர்க்கும் உடன்பாடாதல், "தமிழைப்போலவே பழமையுடையவெனச் சொல்லற் கியைந்த வடமொழி, கிரேக்கு, லத்தீன், ஈபுரு, அராபி முதலிய மொழிக ளெல்லாம்" என அவரே "நான்மறக்கினும்சொல்லுநா" என்றபடி சொல்லுதலானு மறியப்படும்.

இனி, இராஜையனர் பொருளிலக்கணம் தமிழுக்கு விசேடம் என் றும், திருவள்ளுவர், பொருளை அறம், பொருள், இன்பம் எனப் பகுத் தது வடநூன்முறைபற்றியன்று, அப்பகுப்புத் தமிழ்நூல்களுக்கு இயல் பென்றும் பரிமேலழகர் பொருளை வடநூன்முறைபற்றி . அறம் பொரு ளின்பம் எனப்பகுத்தார் என்றது பிழை என்றும் உரைத்தார்கள். பொரு ளிலக்கணந் தமிழுக்கு விசேடமே. ஆயினும், இறையனர் 'களவெனப்படு வது—அந்தண ரருமறை மன்ற லெட்டனுட்—கந்தருவ வழக்கம்' எனக் கூறுதலானும், தொல்காப்பியரும், 'மறையோர் தேத்து மன்ற லெட்டினுட், கந்தருவ வழக்க மென்மனார் புலவர்' எனக் கூறுதலானும், வடமொழிக் காந்தமுதலியவற்றுள்ளுங் கூறப்படுதலானும் வடமொழிக்கண்ணும் அப்பொருளிலக்கணஞ் சுருக்கிக்கூறப்பட்டுளதென்பதூஉம், திருவள்ளு வர் வடநூன்முறையையுந்தழுவி நூல்செய்தாரென்பதை, அந்நூற்



சிறப்புப்பாயிரத்திலேதானே, சங்கப்புலவர்பலர், "நான்மறையின் மெய்ப் பொருளை முப்பொருளா" எனவும், "சாற்றிய பல்கலையும் தப்பா வரு மறையும்—போற்றி யுரைத்த பொருளெல்லாம்—தோற்றவே—முப்பான் மொழிந்த" எனவும், "மெய்யாய வேதப் பொருள்விளங்கப்—பொய்யாது தந்தான்" எனவும், "முப்பாலினோதுப்—தருமமுதனான்கும் சாலும்" எனவும் கூறுதலானே, வேதமுதலியவற்றிலே சொல்லப்பட்ட தரும முதலிய நான்கனையுமே வள்ளுவனர் முப்பாலாக விரித்துச் செய்தார் என்பது அறியக்கிடத்தலின், வடமொழிவழக்குப்பற்றித் திருவள்ளு வர் பொருளை முப்பாலாக வகுத்தார் எனப் பரிமேலழகர்கூறியது வழுவன்மையும் உணரப்படுதலின் இராஜையனர் உரைத்தது ஈண்டும் பொருந்தாமையுணர்க. இன்னும் அவருரைத்தனபல பொருந்தாமை யுள்ளன. அவற்றை யாம் இங்கே யெடுத்து மறுக்கப்புகின் விரியுமென் றஞ்சி விடுக்கின்றாம். அறிஞர்கள் நோக்கியுணர்க.

இதுகாறும் கூறியவாற்றால் தமிழ்மொழிக்கு வடமொழி பிந்திய மொழியன்றென்பதூஉம், வடமொழியைப் பிற்காலத்துண்டானமொழி யென்று இராஜையனர் உரைத்தது பொருந்தாது என்பதூஉம் பொரு ளிலக்கணம் வடமொழிக்கண்ணும் சுருக்கிக்குறிப்பிக்கப்பட்டுளதென்ப தூஉம், திருவள்ளுவனர் அறம்பொருளின்பமெனப் பொருட்பாகுபாடு செய்தது வடமொழிபற்றி என்பதூஉம் அறியக்கிடந்தமை காண்க. (தமிழ்ப்பாஷையை வளர்க்கவிரும்புவோர் அதனை வளர்க்கமுயலுவதை யொழித்து வடமொழியை இகழ்வதுதான் என்னையோ? அதனாற் றமிழை வளர்க்கலாமா? ஆதலின் அதனையொழித்துத் தமிழைச் சங்கச்சான்றோர்போல வளர்க்கமுயலுவாராக)

இங்ஙனம்,

சி. கணேசையர்,

புன்னாலைக்கட்டுவன்.

உ

# "தொல்காப்பியவாராய்ச்சி."

[௨௱௮-ம் பக்கத் தொடர்ச்சி.]

அவற்றுள்,
நிறுத்த சொல்லி னீறா கெழுத்தொடு
குறித்துவரு கிளவி முதலெழுத் தியையப்
பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்
பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலுந்
தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலுந்
தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலு
மூன்றே திரிபிட னொன்றே யியல்பென
வாங்கந் நான்கே மொழிபுண ரியல்பே. (௬)

இது முன்னர்க்கூறிய நிறுத்தசொல்லுங் குறித்துவருகிளவியும் இன்னபகுதியினவென்றும், இவை புணருங்காலத்து இன்னவை நிகழப் பெறுமென்றும் உணர்த்துகின்றது.

(இ-ள்) அவ்விருவகைமொழிகடம்முள்ளே முதற்கண் நிறுத்தப்பட்டசொல்லினது ஈறாகுகின்ற எழுத்தோடு அதன்பொருண்மையை முடித்தலைக்குறித்துவருகின்றசொல்லினது முதலெழுத்துப்பொருந்தப் பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லைப் புணர்க்குமிடத்தும், பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லைப் புணர்க்குமிடத்தும், வினைச்சொல்லோடு பெயர்ச்சொல்லைப் புணர்க்குமிடத்தும், வினைச்சொல்லோடு வினைச்சொல்லைப் புணர்க்குமிடத்தும் அச்சொற்கள் கூடும் இலக்கணம், திரியுமிட மூன்றும், இயல்பு ஒன்றும் என்ற அவ்விடத்திலுண்டாகிய அந்தநான்குமே யாகும்,

திரிபிடன் மூன்றே, இயல்பு ஒன்றே, என நான்கு; ஆங்கு அந்நான்கு மொழிபுணர் இயல் என்பதுவே கருத்து.

விகாரம் வந்தவிடத்து இயல்பும், இயல்புவந்தவிடத்து விகாரமும் தோன்றப்பெறா என்பது போதா "ஆங்கு" என்று கூறினர். "மூன்று திரிபு என்னாது "திரிபிடன்" என்ற விலேசானே ஒரு புணர்ச்சிக்கண் ஒன்றேயன்றி இரண்டு மூன்றும் வரப்பெறும் என் றறிந்துகொள்க,



அவ்விரண்டனுண் முதற்கண் நிற்பது நிறுத்தசொல் என்பது போதா "அவற்றுள், நிறுத்த சொல்லி னீறா கெழுத்தொடு—குறித்து வருகிளவி முதலெழுத் தியைய" என்றார்.

அவ் விருசொற்களும் அங்ஙனம் புணர்தற்குக் காரணம் பெயரொடு பெயரையும், பெயரொடு தொழிலையும், தொழிலொடுபெயரையும், தொழிலொடுதொழிலையுங் கூட்டுதலே யென்க.

இரண்டுபொருளை வரிசையாகவைத்துச் சேர்க்கின் முதற்கண்ணுள்ளதின் ஈற்றுப்பாகமும் அதன் பக்கத்துள்ளதின் முதற்பாகமும் ஆகிய அவ்விரண்டுமே சேர்ந்தனவென்றும் அவ்விருபொருள்களும் தம்முட் சேரவில்லையென்றும் கருதுதல் தருக்கமுறையும் வழக்காறும் ஆகாது. ஆதலின் அவ் விரண்டுபொருள்களும் தம்முட் சேர்ந்தன வென்பது இலக்கணமாகும்.

இவ்வாறே நிறுத்தசொல்லின் ஈற்றின்கண்ணும், குறித்துவருகிளவியின் முதற்கண்ணும் உள்ள எழுத்துக்களும் சேரப்பெறின் அவ்வெழுத்துக்களே ஒன்றுசேர்ந்தனவென்று எண்ணுதல் சாலாது. அவ்விருசொற்களும் தம்முட்சேர்ந்தன வென்றெண்ணுதலே ஆசிரியர் கருத்தென்று கருதுக.

ஓரெழுத் தொருமொழிக்கு ஈறும் முதலும் அதுவேயென் றறிந்து கொள்க,

பெயரின் இன்றியமையாமைதோன்ற அது முற்கூறப்பட்டது. "பெயரொடுதொழிலைப் புணர்க்குங்காலும்" என்னும் இதற்குப்பின்னர்த் "தொழிலொடு தொழிலைப் புணர்க்குங்காலும்" என்னு மிதனையே கூறுவது தாம் எடுத்துக்கொண்ட மாலைக்கு இயல்புடைத்தாயிருக்கவும் அங்ஙனங் கூறாது "தொழிலொடு பெயரைப் புணர்க்குங்காலும்" என்னும் இதனையே கூறியதை உற்றுநோக்கின் மேற்கூறியவுண்மை செவ்விதிற் புலனாகும். அன்றியும், பெயரியல்கூறியபின்னர் வினையியல்கூறும் வைப்பும் இதனையே வலியுறுத்துமென்க.

இனிப் "புணர்க்குங்காலும்" என்று அடிதோறும் கூறியதுகுற்றம். "பெயரொடும் வினையொடும் பெயர்வினை தம்மைப்—புணர்க்குங்காலும்"

என்றுங்குறைத்தலே சுருங்கக்கூறலாகுமெனின்? ஒன்றனோடு ஒரேமுறையிற் பலவும் புணர்தலுங்கூடுமெனப் போதருதலினானும், வரிசைப் படுத்தி மனசிற் பதியவும், படித்தவுடனே பாடமாகவும் யாக்கவேண்டியதுவே நூற்பாவின் இன்றியமையாவிலக்கணமாதலினானும், மேற்கூறியாங்கு அமையப்பெறுதவற்றை எவரும் விரும்பிக் கற்கமாட்டாராதலினானும், பிறவாறு கூறுவனவெல்லாம் நாளடைவில் இறந்துவிடும் ஆதலினானும், அன்னபிறவற்றானும் அங்ஙனங் கூறுதது குற்றமாகாதென்றறிந்துகொள்க.

இந்நுணுக்கங்களை அறியமாட்டாத பிற்காலத்தார் "மெய்யுயிரிவற்றை முதலீறுபடைத்த—பெயர்வினை தம்மொடும் பிறவொடும் புணர்வழி—விகார மூன்றோ டொன்றியல் பென்பவே" என்று ஆசிரியர் ஏழடியானும், ஒன்பதடியானும் இயற்றிய இரண்டுசூத்திரங்களையும் சுருக்கிக் கூறுவார்போன்று பாழாக்கி உலகினை நவியவைப்பர் என்க.

இனி, அவ்விருசொற்களும் விகாரவகையாற் புணருங்காலத்து அவற்றின் முதலீறுகள் சிதையப்பெறிற் புணர்ச்சியென்பது எவ்வாறுண்டாகுமெனின் ஆமாறு கூறுதும்.

இருபொருள்கள் தம்முட்பொருந்துவதற்கு முரணுமேல் அம்முரணை அழித்தும், பொருந்துமாறு ஏனையவற்றைப் பெய்தும், பிறவாறுபுரிந்தும் அவற்றைப் பொருத்துதல் உலகவழக்கமன்றே? அங்ஙனமே விகாரவகைகளைப்புரிந்து அவ் விருசொற்களையுந் தம்முட்பொருந்துமாறு செய்தலிற் பொருந்துமென்க.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'மூன்றுதிரிபு' என்றது இடனென்றதனால் ஒருபுணர்ச்சிக்கண் மூன்றும் ஒருங்கேயும்வரப்பெறுமென்றுணர்க என்றமை பாராட்டற்பாலது.

அவை முதலீறுகளின்வகையானும் பெயர் வினை முதலாய சொல்வகையானும் பதினாறாகும் என்க.

> அவைதாம்,
> மெய்பிறி தாதன் மிகுதல் குன்றலென்
> றிவ்வென மொழிப திரியு மாறே.

இது முற்கூறிய மூன்று திரிபுகளையும் இனவயென உணர்த்துகின்றது.



(இ-ள்) அத்திரிபுகடாம் நின்றமெய் வேறுபடுதல், மிகுதல், குன்றுதல் என்னும் இம்முப்பிரிவினையுடையவென்று ஆசிரியர் கூறுவர்.

இனித் தோன்றல், திரிதல், கெடுதல் என்னாது இங்ஙனங் கூறியது என்னையோவெனிற் கூறுதும். உயிர்தோன்றுதல் யாண்டுமின்மையினானும், கெடிற் பின்னர் விரித்தவிடத்து உண்டாவது கூடாது ஆதலினானும் பிறவாற்றானும் அங்ஙனங் கூறுதல் சாலாது என்ப.

இவ்விகாரங்கள் அல்வழி, வேற்றுமைதம் புலப்பாடுகருதியும், மெய்ம்மயங்குநிலையின் இயல்புபற்றியு முண்டாகுமென்ப. அவை முன்னர்க் கூறப்படும்.

"அவைதாம்" என்றது பன்மைக்கிளவியாதலின் "மூன்றே திரிபிடனொன்றே யியல்பென—வாங்கந் நான்கே" எனப் பிரித்துரைத்தவற்றுள் "மூன்றே திரிபிடன்" என்றதனையே குறிக்கும். "மூன்று", "ஒன்று" என்பனவற்றிற்கு ஏகாரங்கொடுத்ததூஉம், "ஆங்க" என்னுமிதனை நான்குக்குப் பெய்துரைத்தமையும் அவ்வுண்மையை நன்குபுலப்படுத்துவனவாகும்.

ஆதலின் "ஆங்க" என்னுமிதற்குப் பழமையைநாடிப் பொருள் கூறுதல் பொருந்தாதென்க. இங்ஙனமே பிற்காலத்தார் தத்தங்கோளை நிறுவுவான்வேண்டிப் பலப்பலவற்றையும் இடையிடையே செருகிவைத்திட்டார் என்றறிந்துகொள்க.

திரிபுகடாம் இவையென்று விதந்தோதினமையின் இவையல்லாதனவெல்லாம் இயல்பென்று அறியப்பெறுதலின் இயல்பு இதுவாகுமென்று சூத்திரித்தன் மிகைபடக்கூறுதல் என்னுங் குற்றத்திற் கிடனாகும்.

இன்னோரன்ன இயல்புகளையறியாத பிற்காலத்தார் இந்நூற்குச் சொற்பல்குதல் என்னுங் குற்றத்தை யேற்றுவர். அவர்கூற்றெல்லாம் அறியாமைமேலிட்டாற்றோன்றியவென்று விடுக்க.

> நிறுத்த சொல்லுங் குறித்துவரு கிளவியு
> மடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய. (அ)

இஃது இவ்விருசொற்களும் அடையடுத்து வருங்காலத்துப் புணருமியல்பு இதுவெனக் கூறுதலின் எய்தியதன்மேற் சிறப்புவிதியாயிற்று.

(இ-ள்) முன்னர் நிறுத்தப்பட்டசொல்லும், அதன் பொருண்மையை முடித்தற்பொருட்டுக் குறித்துவருகின்றசொல்லும், தாமே வாராது அடைபடைத்துவரினும் புணரும் நிலைமைக்குரியனவாகும்.

வேந்தன் விண்ணிடைப் பறந்தொளிரும் ஓர் அழகிய பறவையைக் கண்டான். என்னும் இவ்வாக்கியத்துள்ளே வேந்தன் என்பது நிறுத்த சொல். கண்டான் என்பது குறித்துவருகிளவி.

குறித்துவருகிளவியாகிய 'கண்டான்' என்பது பல அடைகளைக் கொண்டுள்ளதாயினும் அது புணர்நிலைக்குரியது. குறித்துவருகிளவியின் அடைகளும் தம்மொடுதாமும் நிறுத்தசொல்லொடு அவை தாமும் அங்ஙனமே புணர்தற்குரியன. நிறுத்தசொல்லுக்கும் இவ்வாறே பெய்துரைத்துக்கொள்க.

இங்ஙனம் புணர்வது முறையோவென்னின் முறையே. எங்ஙனம் என்னிற்கூறுதும். ஓரரசன்முன் மற்றையோரரசன் வந்தகாலத்து அவ்வரசர் தமக்கு முன்னும் பின்னும் பலர் இருப்பினும் அவரெல்லாம் காணற்குரியராயினாற்போல் இவைதாமும் புணர்தற்குரியனவென்க.

இவற்றையெல்லாம் இடைப்பிறவரல் என்று பிற்காலத்தார் அடக்குவர். அவர் இட்ட பெயர் பொருந்ாதென்றலையும் உய்த்துணர்ந்து கொள்க.

முன்னோர் உரைத்த உரைவிகற்பங்களெல்லாம் இக்கூறியவற்றுள் அடங்குமென்க.

(தொடரும்)

இங்ஙனம்,

நவநீதகிருஷ்ணன்.

---

உ

# பெரியபுராணச்செய்யுட்டொகையாராய்ச்சி.

—✱(o)✱—

சென்ற ஆனிமாதப்பகுதியிலே (தொகுதி 20–பக். 331) அளவிலாத பெருமையராகிய சைவத்திருத்தொண்டர்களது பெருமையைக் கூறும் திருத்தொண்டர்புராணமெனும் பெரியபுராணச்செய்யுட்டொகையை ஆராய்ச்சி செய்தவிடத்து V-வது பகுதியின்கீழ், போதபெருங்காதற்றிருவுள்ளப்பரிவுடனே செம்பொன்மலைவல்லியார்தரு வள்ளத்தமுதுண்ட சம்பந்தப்பெருமான் கருகாவூர் முதலிய க்ஷேத்திரங்களைத் தரிசனம்செய்துகொண்டு, திருவலஞ்சுழியடைந்து, மாதொர்கூறன் வலஞ்சுழிமருவிய மருந்தாம் கற்பகநாதனையும் பெரியநாயகியாரையும் பணிந்து,

> "என்னபுண்ணியஞ் செய்தனை நெஞ்சமேயிருங்கடல்வையத்து
> முன்னநீபுரிநல்வினைப்பயனிடைமுழுமணித்தரளங்கண்
> மன்னுகாவிரிசூழ்திருவலஞ்சுழிவாணனைவாயாரப
> பன்னியாதரித்தேத்தியும்பாடியும்வழிபடுமதனாலே"

என்று பாவிப் பாடினர். அங்ஙனம் பாடிய சண்பைவரும்பிள்ளையார் சடாமகுடர்வலஞ்சுழியை யெண்பெருகத் தொழுதேத்திப் பழையாறையையடைவதற்காக ஆறைமேற்றளிசென்றெய்தினார்; என்று கதைத் தொடர்புடைமையையும், நடுவில்வருகின்ற வேனிலின்வருணனை இடைச்செருகல் என்பதையும் காட்டினேன்.

உதவிப்பத்திராதிபரவர்கள் 392-ம் செய்யுளால் இவ்வேனிற்கால வருணனை இடைச்செருகலன்றென்று தோன்றுகிறது, திருச்சத்திமுற்றத்திலிருந்து நாயனார் திருப்பட்டீச்சரஞ்செல்லுங்கால் வேனிலால் உண்டாகிய வெப்பத்தைத்தணிக்கும்படி நாயனார்க்குப் பட்டீச்சரமுடையார் முத்துப்பந்தரளித்தனரென்று கூறியிருக்கின்றனரன்றோ? முன்பு வேனிற்காலத்தைப்பற்றிக் கூறாவிட்டால் இங்கு வேனிலால்வரும்வெப்பத்தைத்தணிக்க முத்துப்பந்தரளித்தனரென்பது எங்ஙனம் பொருந்தும் என்று ஒரு வினாவை யெழுப்பியுள்ளார்கள். இவ்வாறு எழுப்பிய வினாவிற்குப் பெரிதும் கடப்பாடுடையேன். சண்பைவரும்பிள்ளையார் சடாமகுடர் வலஞ்சுழியைத் தொழுதேத்திப் பழையாறையெய்துதற்கு நண்

புடையவடியார்களுடன்போத நடந்தருளி விண்பொருநீண்மதிளாறை சென்றெய்தினாரன்றே. பிள்ளையார்செய்தியைக்கூறிய சேவைகாவலர் வேனில் வெப்பமிகுதி யிருந்திருக்குமாயின் ஆறைமேற்றளியைவிட்டுத் திருச்சத்திமுற்றம் சென்றபோது கூறியிருக்கலாம். இவ்விரண்டு தலங் களையும் கடந்து திருப்பட்டீச்சரம்புகுங்காற்றான் வெம்மைதரு வேனி லிடை வெயில்வெப்பந்தணிப்பதற்கு மும்மைநிலைத்தமிழ்விரகர்தமை யறியாதபடி தண்டரளப்பந்தர் வந்ததென்றார். உதவிப்பத்திராதிபாவர் கள் 'வெம்மைதரு' 'வெப்பம்' என்ற அடைகளைச் சுட்டி இவ்வேனிற்கால வருணனை இடைச்செருகலன்றென்றார் எனத் தோற்றுகிறது. அங்ஙன மாயினும் அவ்வேனிற்காலவருணனை முற்செய்யுளில் (391) மேவுங்கால் என்ற எச்சத்திற்குப் பின்னர் இருந்திருக்குமாயின், பொருத்தமுடைய தாகக்கூறல் தகும். அங்ஙனம் காணப்படவில்லை. முன் 382-வது செய்யுளில், பரவிப் பாடியவர் பின்னர் என்செய்தார் என்றவினா எழுவ தல்லது வேறுவினா எழக் காரணமின்றாம். அவ்வினாவிற்குத் தொழு தேத்திப்(389) பழையாறை எய்துதற்கு நடந்தருளினார் என்று விடையிறுத்தற்கமையுமேயன்றிப் புறத்தினி லணைந்து வலஞ்சூழிப் பெருமான்றொண்டர்தம்முடன் மகிழ்ந்தார் என்று விடையிறுக்க வமை யாது.

"மகிழ்ந்ததன்றலைவாழுமந்நாளிடைவானிற்
றிகழ்ந்தஞாயிறுதுணைப்புணரோரையுட்சேர்ந்து
நிகழ்ந்ததன்மையினிலவுமேழ்கடனீர்மைகுன்ற
வெருண்டுவெங்கதிர்பாப்பவின்முதிர்ந்ததுவேனில் (384)

என்று காணப்படுகிறது. துணைப்புணர் ஓரையாவது மிதுனம்; ஆனி மாதமென்ப. முதுவேனில் இவ்விதமிருந்ததென்று இப்பாட்டிற்கூறிய சேவைகாவலர் 'சுடர்வானில், வெயிலொடுங்கா வெம்மைதரும் வேனில் விரிதருநாளில்' என்பது கூறியது கூறலாகும் என்று சொல்ல அடியேன் அஞ்சுகிறேன். இரண்டாவதாக, ஆறைமேற்றளி, திருச்சத்திமுற்றம் என்ற இரண்டு ஊர்களிலும் சென்றபொழுது அவ்வெப்பம் தோன்ற வில்லையா என்றவினா வெழும். பிள்ளையார் வெயில்வெப்பம் தீரவேண்டு மென யாண்டும் விரும்பியதாகக் காணப்படவில்லை. அருள்வள்ளல் கருணையின்றிறன்காணும்படி 'உரையும் மணிமுத்தின் பந்தரும் ஆகாசமெழுந்ததென்று காணப்படுகிறது. முன்னர், திருவறத்



துறையில் முத்துச்சிவிகைகொடுக்குங்காற் பாலறாவாயர் தந் தந்தையார் தூக்கிச் செல்லத் தாம்செல்வது தகுதியன்றென்றெண்ணி முன்னடந் தாராக; 'தாதையாரும் பரிவுறப் பாததாமரை நொந்தன வைப்பப' என்று காணப்படுவதன்றி அந்நிலத்தியல்பு கூறப்பட்டிலது. இதுபோன்றே நம்பியாரூரர் பேரூரினின்றும் திரும்பியபொழுது அங்ஙகன்று காரூரும் மலைநாடு கட்ந்தருளிக் கற்சுரமும் நீரூருங்கான்யாறும் நெடுங்கானும பல கழியத் திருமுருகன்பூண்டியடைந்தார் என்று காணப்படுகிறது. அங் கும் நிலவருணனை யில்லை.

இனி, இமையவர்கோனடிக்கட் டிறம்பயில் ஞானசம்பந்தனும் பெரி யார் திருநனாவைத் தரிசனஞ்செய்து செங்குன்றூரிடத்து வதியுநாளின் கண்,

......................................................................
தூங்குதுளிமுகிற்குலங்கள்சுரந்தபெயலொழிகாலை
வீங்கொலிநீர்வைப்பெல்லாம்வெயில்பெறுவிருப்புவரப்
பாங்கர்வரையுங்குளிரும்பனிப்பருவமெய்தியதால் ௩௨௮.

அளிக்குலங்கள்சுளிந்தகலவரவிந்தமுகம்புலரப்
பளிக்குமணிமாகதவல்லியிற்கோத்தபான்மையெனத்
துளித்தலைமெல்லறுகுபனிதொடுத்தசையச்சூழ்பனியாற்
குளிர்க்குடைந்துவெண்படாம்போர்த்தனையகுன்றுகளும் ௩௨௯.

மொய்யொளிகூர்குளிர்வாடைமுழுதுலவும்பொழுதேயாய்க்
கொய்தளிர்மென்சோலைகளுங்குலைந்தசையக்குளிர்கொதுங்கி
வெய்யவனுங்காநிமிர்க்கமாட்டான்போல்விசும்பினிடை
யைதுவெயில்விரிப்பதுவுமடங்குவதுமாகுமால் ௩௩0.

நீடியவப்பதிகளெலாநிரைமாடத்திறைகடொறும்
பேடையுடன்பவளக்காற்புறவொடுங்கப்பித்திகையிற்
றோடலர்மென்குழன்மடவார்துணைக்கலசவெம்முலையுள்
ஆடவர்தம்பணைத்தோளுமணிமார்புமடங்குவன ௩௩௧.

அரிசனமுங்குங்குமமுமரைத்தமைப்பாயலெல்லாம்
பரியவகிற்குறைபிளந்துபுகைப்பார்கள்பாங்கெல்லாம்
எரியுமிழ்பேழ்வாய்த்தோணியிரும்பீர்ப்பாரிடையெல்லாம்
விரிமலர்மென்புறவணிந்தமீப்புலத்துவைப்பெல்லாம் ௩௩௨.

அந்நாளிற்கொடிமாடச்செங்குன்றூரமர்ந்திருந்த
மெஞ்ஞானப்பிள்ளையாருடன்மேவும்பரிசனங்கள்
பன்னாளுமந்நாட்டிற்பயின்றதனாற்பனித்தகுளிர்
முன்னானபிணிவந்துமூள்வதுபோன்முடுகுதலும் ௩௩௩.

அங்நிலைமையாளுடையபிள்ளையார்க்கவர்களேலா
முன்னறிவித்திறைஞ்சுதலுமுதல்வனாருடொழுதே
யிங்நிலத்தினியல்பெனி னுநமக்கெய்தப்பெறுவென் று
சென்னிமதியணிந்தாரைத்திருப்பதிகம்பாடுவார் கூநச.

என்று காணப்படவில்லையா? பனிக்காலவியல்புகூறிய உத்தமசோழப் பல்லவர் முதுவேனிற்காலவியல்புகூறல் தகுதியன்றோவெனின், ஈண்டுப் பிள்ளையார் தம்பரிசனங்களின்வேண்டுகோளை ஏற்றுப் பாடினரென்பதை யும், அக்காலத்தும் அவை நம்மை யெய்தப்பெறுவென்று சொல்லியிருத் தலையும் நோக்கல்வேண்டும் இன்னும் பாக்களின்போக்கும் காலவியல்புக் குத்தக்கவாறிருத்தலையும் ஊன்றிநோக்கல்வேண்டும்.

இதுவன்றி, மருதநிலத்தில் ஆனிமாதத்தில் ஆற்றுப்பெருக்குண் டாகையால் வேனில்வெப்பந் தெரிவதில்லையென்பதை மறுக்கவொண் ணாது இன்றும் கண்கூடாகக்காண்பதொரு செய்தியாம். இளவேனிற் பருவமுதிர வெப்பமும் அதிகரித்த லியல்பு. ஆற்றில் வெள்ளம்வரப் பூமி குளிர்ந்து வெப்பம்தணிவது இயற்கை.

அன்றி, முதுவேனிற்பருவம் கிரீஷ்மருதுவென்றுகொண்டு,

“[illegible]” என்றும், “[illegible]” என்றும் காணப்படவில்லையா எனின் அவை மலைநாட்டுச்செய்திகளாம். மலைநாட்டில் முதுவேனிற்பருவம் தாங்கமுடியாததாகவே இருக்கும். மலைகளிலும் பாறைகளிலும் படும் வெயில் திரும்பச் சமதரையிற்பட வெப்பம் அதிகரிக்கும். குளிர்ந்த பூமியில்விழும் வெப்பம் தெரிவதில்லை.

இவைகள் ஒருபுறமாக முதுவேனிற்பருவவருணனையைநோக்கின் வசந்தகாலவருணனையாகக் காணப்படுகிறதேயன்றி வேறாகக் காணப்பட வில்லை. சந்தனத்தேய்வைக் கொள்ளுவதும், வாசமென்மலர் அணிவ தும், பொதிபனிநீரில் மூழ்குவதும், நீணிலைமாளிகைமேலும் நிலாமுன் றின்மேலும் சேர்லையினும் மலர்வாவிக்கரைமாடும் பூங்குழலார்முலைத் தடத்தும் மகிழ்ச்சியின்பலர்ந்து மாந்தருறையுநா ளெங்நாளோ! குயி லொடுங்காது கூவுதல் வெள்ளம்வருமுன்னன்றோ? இவைகளை யூன்றி நோக்கினும் இவை இடைச்செருகலென்றே தோன்றுகிறது. ஆயினும் பெரியார் ஏற்ற சமாதானம்சொல்லுவார்களாயின், சிற்றறிவினையுடையேன் மறுக்க முற்படுபவனல்லன். ஆராய்ச்சிசெய்தற்கென்றே மீண்டும் எழு தத் துணிந்தேன்.

இலக்கணவிளக்கபாம்பரை,
திருவாரூர். சோமசுந்தரதேசிகன்.

ஸ்ரீ:

# சிற்றுராய்ச்சி.

## I. ஆசிரியர் இளம்பூரணவடிகள் தொல்காப்பிய உரைச்சிறப்புப்பாயிரம்.

தண்கட லசைவளி யுறுப்பத் திரைபிதிர்ந்
தூங்கலின் பொருட்குவைப் புணரியி லையுற
வலைவமன் மயரினை யகற்ற லெழுத்தா
றிணை துறை யுட்கோ ளியற்றிற னறியாக்
கவர்பொருண் மாக்கண் மயக்கினுக் கிரங்கி
பாயிருங் காப்பியச் சுவைபல வுணர்ந்தகந்
தோய மடுத்தோர் தோல்காப் பியனுரை
முத்திற லோத்தினுக் கொத்தசீர்க் காண்டிகை
சொன்னில மேற்கோள் தொகுபொரு ளெனிபுட
னியனூற் பாமுடி பிணைத்தடி காட்டி
தலைசடை கூட்டித் தந்தனன் பண்டே
கோங்குவேண் மாக்கதை குறிப்புரை கண்டோன்
தன்னறி யளவையி னல்லுரை தேவர்
பன்மணிக் குறட்பான் மதிப்பிடப் பொறித்தோன்
குணகடற் செல்லூர் மணக்குட புரியான்
தண்முலை முகையென வெண்ணூல் சூடி
யந்தணன் றுறவோ னருமறை யுணர்ந்த
விளம்போதி பயந்த புனித
னிளம்பூரணனுரை யினிது வாழ் கிங்கென.

[திருவருளால் தோல்காப்பியப் பொருளதிகாரத்துக்கு உரையாசிரி யர் உரைமுற்றிய ஏடு ஒன்று எனக்குச் சேந்தன்மங்கலத்திற் கிட்டிற்று. அதனை ஆராய்ந்து அச்சிற்கு இலக்காக்கிமுடிக்கச் சென்னை ஸ்ரீமான். கா. நமச்சிவாயமுதலியாரவர்கள் ஏற்று, வெளிப்படுத்திவருகிறார்கள். அவ்வேட்டின் தலைப்பிற் பொறிக்கப்பட்டிருக்கும் இச்சிறப்புப்பாயிரத்தி னால் ஆராய்ச்சியாளர்பலர்க்கும், பல உட்கோள் புலனும் என எண்ணி விரைந்து செந்தமிழ்க்கு அனுப்பலாயிற்று. நூன்முழுதும் இவ்வாண் டிறுதியில் வெளிவரும்.]

## II. திணைமொழிஐம்பது முதற்பாட்டடிகள்.

திருவருளாற் காணக்கிடைத்த "திணைமொழிஐம்பது" என்னும் நூல் கண்ணன்சேந்தனார் என்னும் புலவர் ஒருவரால் இயற்றப்பெற்றுக் கடைச்சங்கத்தினராற் பதினெண்கீழ்க்கணக்கினுள் ஒன்றாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

இந்நூல் ஸ்ரீமாந். சோமசுந்தரதேசிகர் என்னும் பெருந்தகையாளர் ஒருவரால் அச்சிடப்பெற்றிருக்கின்றது என்று என் நண்பர் ஒருவர் பிரதி ஒன்று அனுப்பித்தருளினார். அதனை, சிலதிங்கட்குமுன் எனக்குக் கிடைத்த ஸ்ரீமாந். சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் ஓலையேட்டுப்பிரதியொடும், என். நெல்லையம்பலப்பிரதியோடும் ஒப்பிட்டுப்பார்த்ததில் எத்துணையோபிழைகள் புலனாயின. எனினும் சிரமம்பாராட்டாது முதன்முதல் வெளியிட்ட தேசிகரவர்களுக்குத் தமிழுலகம் நன்றி பாராட்டுமென்றல் ஒருதலை. நிற்க [இரண்டாம்பதிப்பாக எவரேனும் இந்நூலை வெளியிடவருவரேற் சுத்தநூல் உரை, பாடங்கள் தந்துதவலாகும்]

இந்நூலின் முதற்பாட்டு அச்சிட்டபுத்தகத்திலும் கிடைத்த ஓலையேட்டுச்சுவடிகளிலும் காணப்படவில்லை. அதன் உரையாக, நெல்லையம்பலத்து என்பிரதியிற் காணப்படுபவை–¶ ஏனலைக்காக்கின்றவருடையபாணி.................................................................................
.................................ணடர்துகள் பொருகின்ற வானளவு முயர்ந்த வெற்பனே இரவின்கண்வருதல் வேண்டா யானைவருகின்ற சுரங்களாதலான்.

என்பது இவ்வுரையின் பிற்பகுதிக்குரிய அடிகளை நச்சினார்க்கினியர் தொல்காப்பியச்செய்யுளியல் ௬௪-ம் சூத்திரஉரைமேற்கோளாக எடுத்துக்காட்டியிருக்கின்றனர். அவர் காட்டியிருக்குமாறு:—

"வானுயர்வெற்பவிரவின்வரல்வேண்டா
யானையுடையசுரம்"

இது கட்டளைவருக்கவெதுகை–என்பது.

ஆகவே இந்நிலையில் திணைமொழி ஐம்பதன், முதற்பாட்டின் பின்னிரண்டடிகள் இவையெனக் கருதலாகும்.

பெயர்விழையான்,
தச்சநல்லூர்.

---

¶ அச்சிடப்பட்டுள்ள பிரதியில் உரைவித்தியாசப்படுபவைநோக்கி ஒப்பிட்டுக்கொள்க.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று
மாதந்தோறும் வெளிவரும்

# ஒரு தமிழ்ப்பத்திரிகை.

## இருபதாந்தொகுதி.

VOL-XX.

பத்திராதிபர்:—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்
பதிப்பு.
1921–1922.

# செந்தமிழ்

## இருபதாந்தொகுதியின் உள்ளுறை.


| விஷயம். | எழுதியவர். | பக்கம். |
|---|---|---|
| அசதிக்கோவை:— | ஸ்ரீமத். P. C. புன்னைவனநாதமுதலியாரவர்கள். | ௧௨௩ |
| அந்தணரென்போர்யாவர்?:— | ,, T. V. சாமிநாதையரவர்கள் B.A., L.T., | ௨௨௨ |
| அநுதாபக்குறிப்பு:— | பத்திராதிபர் ௧௪௭, ௩௩௮, | ௪௧௭ |
| அல்குல்:— | ஸ்ரீமத். ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளையவர்கள். | ௧௨௫ |
| ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு:— | | ௩௦௮ |
| எண்ணெழுத்திகழேல்:— | ஸ்ரீமத். T. V. சாமிநாதையரவர்கள் B.A., L.T., | ௧௫௭ |
| ஐயவினா:— | ,, சி. சிவசங்கரையரவர்கள் | ௩௩௭ |
| ஐயவினாவுக்குவிடை:— | ,, K. G. சேஷையரவர்கள் | ௩௯௧ |
| ஷை | ,, சே.ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள். | ௩௯௪ |
| ஒரு குறிப்பு:— | உதவிப்பத்திராதிபர் | ௨௭௩ |
| ஷை | ஸ்ரீமத். பண்டித-மயில்வாகனமவர்கள் | ௪௩௦ |
| ஒருதிருத்தம்:— | உதவிப்பத்திராதிபர் | ௧௧௬ |
| ஒருவிளம்பரம்:— | ஸ்ரீமத். R. வேங்கடாசலம்பிள்ளையவர்கள். | ௯௫ |
| ஓரையநீக்கம்:— | ,, T. N. அப்பனையங்காரவர்கள். | ௩௯௨ |
| கடவுட்பிரார்த்தனைக் கவி:— | ,, V. P. சுப்பிரமணிய முதலியாரவர்கள். | ௩௩௭ |
| கந்தியார்:— | பெயர்விழையான் | ௧௯௯ |
| கலித்தொகைஐயநீக்கம்:— | ஸ்ரீமத். சே. சிவஞானம்பிள்ளையவர்கள். | ௩௪ |
| கவித்தன்மை:— | ,, சி. கணேசையரவர்கள் | ௨௭௯ |
| களப்ரர்கள்:— | ,, தி. நா. சுப்பிரமணியம் அவர்கள். | ௩௫௧ |
| களப்ரரும் சங்ககாலமும்:— | ,, K. G. சங்கரையரவர்கள் | ௪௪௧ |
| காக்கைபாடினியனார்:— | பெயர்விழையான் | ௫௫ |
| கிலத்து (பரிசில்விடை):— | உதவிப்பத்திராதிபர் | ௫௩ |
| கிழவோனெனனுஞ்சொன் முடிபு:— | ஸ்ரீமத். ம. நா. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள். | ௧௩௩ |
| முனைதன் எதிருண்ர:— | பத்திராதிபர் | ௧௩௩ |

கீதாஞ்சலி:— ஸ்ரீமத். R. R. குணரத்நம் B.A. அவர்கள். ௨௧௮
குமாரசுவாமிப்புலவர்:— ,, ச. கந்தையபிள்ளையவர்கள். ௧௪௭
ஷை ,, சி. கணேசையரவர்கள். ௧௫௩
குறும்பூர்ச்சாசனங்கள்:— ,, ஆ. மா. சடகோபராமாநுஜாசாரியர், ௧௬௪, ௨௪௦
கூட்டுறவுப்பண்டசாலை:— ,, K. C. வீரராகவையரவர்கள் M.A. L.T. ௬௪
கேசவப்பெருமாள்வண்ணம்:— உதவிப்பத்திராதிபர். ௯௦
கோனசீமைத்திராவிடப் பிராமணர்கள்:— ஸ்ரீமத். K. C. வீரராகவையரவர்கள் M.A., L.T. ௪௮௧
சிருங்கேரிமடம்:— ,, R. S. நாராயணஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L. ௧௬௨
சிற்றுராய்ச்சி:— பெயர்விழையான் ௫௦௩
சோதிடக்குறிப்புகள்:— ஸ்ரீமத். R. S. நாராயணஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L., ௩௯
சோழன்மணக்கிள்ளி:— ,, சோமசுந்தரதேசிகரவர்கள் ௪௩
ஷை ,, T. N. அப்பனையங்காரவர்கள் ௧௦௧
தமிழ்க்கல்விவளர்ச்சி:— ,, சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள். ௩௪௫
தமிழ்மொழிக்கு வடமொழி செவிலித்தாயாகுமா?:— ,, சு. இராஜையனாரவர்கள் ௩௯௭
தமிழ்வரலாறு:— ,, K. S. ஸ்ரீநிவாஸபிள்ளையவர்கள். ௧
தமிழ்வரலாறு (முற்பாகம்):— பத்திராதிபர் ௯௬
தமிழ்வரலாறு (பிற்பாகம்-முற்பகுதி):— ஷை ௨௨௧
தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு:— ௩௧௨
தனித்தமிழ்ப்பரீக்ஷைவினா:— ௧௨௭
தனிப்பாடல்:— ஸ்ரீமத். V. P. சுப்பிரமணியமுதலியாரவர்கள். ௮௮
திருமுருகாற்றுப்படையாராய்ச்சி:— ஸ்ரீமத். சு. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் ௨௪௫
தொல்காப்பிய ஆராய்ச்சி:— ,, K. S. நவநீதகிருஷ்ணபாரதியவர்கள். ௨௬௫, ௪௯௪
தொல்காப்பியப்பொருளதிகார ஆராய்ச்சி:—பத்திராதிபர். ௧௮௧
நடராஜையரவர்கள்:— ஸ்ரீமத். R. திம்மப்பையரவர்கள். ௩௩௮
நந்திக்கலம்பகம்:— ,, T. R. கோபாலஸாமியவர்கள். ௩௯௪
நல்லந்துவனார் சோதிடப் பொருத்தமும் காலமும்:— ,, சோமசுந்தரதேசிகரவர்கள். ௧௮௨
பஞ்சசித்தாந்திகா:— ,, R. S. நாராயணஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L. ௫௭, ௧௧௭
பல்காப்பியனார்:— பெயர்விழையான். ௧௦௭
பல்காயனார்:— ஷை ௧௦௮





பல்லவர்கோயில்கள்:— ஸ்ரீமத். தி. நா. சுப்பிரமணியம் அவர்கள். ௧௭௬, ௧௮௯, ௨௩௩, ௨௮௭
பழந்தமிழ்நூற்சொல்:— ,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். ௩௧
பாணினீயலகுதீபிகை:— ,, S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L. ௩௧௩, ௪௨௧
பிந்துமதி:— ,, T. N. அப்பனையங்காரவர்கள். ௪௮௫
பிழைதிருத்தம்:— பத்திராதிபர். ௧௫௫, ௨௧௭
புத்தகமதிப்புரை:— பத்திராதிபர். ௪௮, ௧௨௯, ௧௫௬, ௨௭௩, ௩௪௦, ௪௧௯
புரூரவசரிதை:— உதவிப்பத்திராதிபர். ௧௧௧, ௧௪௨, ௧௯௩, ௨௨௬, ௨௮௩, ௩௧௭, ௩௫௭, ௪௭௬
புலவர்சம்மானம்:— ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். ௪௯
பூஞ்சோலைகாவலன்:— ,, பண்டித-மயில்வாகனமவர்கள். ௩௦௧
பெரியபுராணச்செய்யுட்டொகை யாராய்ச்சி:— ,, சோமசுந்தரதேசிகரவர்கள். ௩௨௧, ௪௯௯
மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 21-ம் வருடக்கொண்டாட்டம் உதவிப்பத்திராதிபர். ௪௪௫
மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் இருபத்தோராம் வருடக் கொண்டாட்ட மங்களவாழ்த்து:—
ஸ்ரீமத். சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள். ௪௫௪
,, சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் ௪௫௪
,, M. K. M. அப்துல்காதிறு ராவுத்தரவர்கள். ௪௫௬
,, நா. கனகராஜையரவர்கள் ௪௫௭
,, சர்க்கரை இராமசாமிப்புலவரவர்கள். ௪௬௨
,, K. S. நவநீதகிருஷ்ணபாரதியவர்கள். ௪௬௩
,, ஆ. சு. சுப பாலசுப்பிரமணிய ஐயரவர்கள். ௪௬௫
,, தரு. ஞா. சண்முகத்தம்பிரான் அவர்கள். ௪௬௬
மதுரைத்தமிழ்ச்சங்கநிர்வாகஸபைத்தீர்மானங்கள்:— ௪௭, ௨௭௫, ௩௪௩, ௪௧௮, ௪௬௭
மனோன்மணீயம்:— ஸ்ரீமத். S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L., ௯௭
ஷை பத்திராதிபர் ௨௧௭

முத்திநெறி:— ஸ்ரீமத். ப. சி. சிவப்பிரகாசம்பிள்ளையவர்கள். ௨௯௯, ௩௭௫
மேற்றிசைச்செல்வம்:— ,, பண்டித-மயில்வாகனமவர்கள் ௩௮௧, ௪௬௯
யாப்பருங்கலக்காரிகையுரைத்திருத்தம்:— ,, சி. கணேசையரவர்கள் ௩௫௦
யாப்பறிபுலவோர்நீப்பருவிருந்து:— பெயர்விழையான் ௧௭௧
வடசொல்:— ஸ்ரீமத். சி. கணேசையரவர்கள் ௨௭௭
வடமொழிதென்மொழி:— ,, வ. மு. இரத்தினேசுவரையரவர்கள். ௮௪
வடமொழி முதுமொழியன்று:—,, சி. கணேசையரவர்கள். ௪௮௮
வரவேற்புச்செய்யுள்:— திருவரங்கைவாசன் ௯௮
விஞ்ஞானதீபம்:— ஸ்ரீமத். பண்டித-மயில்வாகனம் அவர்கள். ௪௩௧
விளம்பரம்:— ௩௬௬
வேள்விக்குடிச்செப்பேடுகள்:-ஸ்ரீமத் K. G. சங்கரையரவர்கள் ௨௦௫
வேள்விக்குடிச்செப்பேடுகளில் காணப்படும் பாண்டிய வம்சம்:— ,, ஷை ௪௪௩
ஸம்ஸ்க்ருதவ்ருத்தமஞ்ஜரி:- ,, R. S. நாராயணஸ்வாமிஐயரவர்கள் B.A., B.L., ௩௩௩, ௩௬௭

---

## இத்தொகுதியில் வெளிவந்த நூல்கள்:—

(முற்றுப்பெற்றவை)

1. இராமோதந்தம்:—ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். பகுதி-௩
2. பழமொழிமூலமு முறையும்:— (இரண்டாம்பகுதி-இரண்டாவது நூறு.) பத்திராதிபர். பகுதி-௫,௭

---

(முற்றுப்பெறாதது)

1. கூடற்புராணம்:— உதவிப்பத்திராதிபர். பகுதி-௮, ௯, ௧௦, ௧௧, ௧௨

---



சாந்தமூர்த்தியாய்த்தந்திமால்வரை
வாய்ந்தமானிடச்சிங்கமாயவன்
போந்ததோர் குகைபுக்கிருந்தினு
மாய்ந்தயோகமாநிலையினாயினான். (17)

புகலுமாயிடைப்புலத்தியப்பெயர்ப்
பகவனாமுனிபாலரின்மையா
லகிலநாதனையருச்சித்தேத்தினான்
மிகவுமன்பினால்வேண்டிவேண்டியே. (18)

உயர்துவாபரயுகத்திலித்தல
மயர்தல்கண்டெட்டாங்கமானதின்
றியவுளாயமாலெதிர்வந்தானரோ
சயவரைப்பொருக்கயவரைக்கணே. (19)

சேணினுந்தடந்திசையினும்புறங்
காணினும்பல்லோர்கருத்தினும்பெருந்
தூணினுமுருத்தோன்றுந்தோன்றலைப்
பேணியம்முனிபெரிதும்போற்றினான். (20)

கண்டுவந்தனன்கருணைமாயனுங்
கொண்டநின்மனக்கொள்கைகேளெனத்
தொண்டனேன்மகப்பெறுதல்சூழ்ந்தனன்
விண்டெனக்கெனாமுனிவிளம்பினான். (21)

இனையகேட்டலுமெந்தையாங்கவற்
கனையவண்ணமேயாகவென்றுபின்
முனிவநன்குநின்முன்புதோன்றினா
முனதருந்தவத்து நுகனாலரோ. (22)

அளியில்யோகினிலறிவுநாலுணர்
தெளிவினுன்னைநேர்தெய்வமைந்தனை
வளரும்விச்சிரவாவெனும்பெய
ருளனைநீவிரைந்துதவிவாய்த்தியால். (23)

வேறு.

என்னவோதியென்னையாள்
பின்னைகேள்வன்போந்தனன்
பொன்னைநேர்புலத்தியன்
றன்னிலாட்குச்சாற்றினான். (24)

பரமன்வந்துபாலனைத்
தருவரங்கடந்தனை
விரகினாள்வினாவியே
புருடன்றன்னைப்பூசித்தாள். (25)

சிலதினங்கள்சென்றபின்
கலனணிந்தகற்பினா
ணலனுகர்ந்துநல்கினாள்
குலமுயுங்குமாரனை. (26)

பாரிதந்தபாலனை
யேரிற்கண்டவிருடியுந்
தீரத்தீர்ந்துசித்திக்காய்
மேருச்சாரன்மேவினான். (27)

ஆண்மொயனடிகளைந்
நீண்மென்பொடேத்தியே
மீண்டிடாநல்வீட்டின்பம்
பூண்டதேபுகுர்கனன். (28)

கரிவரையிருந்தகார்
நரமடங்கனன்மையுந்
திருமதுரைச்சீர்த்திய
முறைசெய்தேனிவ்வொன்றினே.()

நாரதன்முன்னாளிலே
யாரணவியாதநீ
நேரிற்கையினெல்லிபோற்
றேர்தியென்றுசெப்பினான். (30)

மாதமாம்வைகாசியி
லாதிபக்கத்தாறிரண்
டோதுமொண்டிதியினி
லீதுரைத்தெஞ்ஞான்றினும். (31)

கேட்டவன்கிளத்தினேன்
மாட்டிருந்தமலமொரிஇ
நாட்டருஞ்சனாதன
வீட்டிலென்றுமேவுவான். (32)

ஈரகரிநகத்தின்சீர்
கருதினேன்கற்பாந்தமும்
பிரமலோகம்பெற்றுமே
லரியமுத்தியடைகுவான். (33)

முதலாவது அத்திகிரிப்படலம் முற்றும்.

ஆகக்கவி—437.

---

## இரண்டாவது:

# அம்பரீடப்படலம்.

———o———

வன்சிறைச்சிம்புள்சாய்க்குமானிடமடங்கலேறாய்ப்
பொன்செறிமார்பன்றேன்றிப்பொருப்பில்வீற்றிருத்தல்சொற்றா
மின்செறிமகுடச்சென்னியினனுவேலம்பரீடன்
றன்சிறப்பியற்றிக்கூடல்சார்ந்தமைபகர்வாமிப்பால். (1)

மேதகுதவரைநோக்கிவியாதனும்வேதநூலி
னீதியாய்த்தூய்தாய்ச்சாலமிகரிலற்புதமாய்ஞானச்
சோதிநாயகன்வியூகசுந்தரக்கடவுள்கூடற்
காதையாயுளதின்மீட்டெங்கேட்பதென்கழறுகென்றான். (2)



நிலத்துட்பிறந்தோயாற்றத்தெளிந்துளோய்முனிவர்க்கெல்லா
மோவற்றமுதலோனீயேயொளிதிகழ்கூடற்பெற்றி
யாவற்றுமுரைக்கற்பாலையெமக்கிவையமிர்தமூன்று
தாவத்தில்வேவார்க்காவிதருகின்றமருந்துமன்றே. (3)

விடயத்தின்வெதும்பும்யாங்கண்மிதப்பநின்கருணைநீரிற்
படிவித்துநனையும்வண்ணம்பரமனன்சரிதந்தன்னை
யடைவிற்போதிப்பாயொப்பிலண்ணலேயின்னுமொன்று
முடிவற்றசவுனகாதிமுனிவர்க்குவியாதன்கூறும். (4)

வலம்புரித்தடக்கைமாயன்மலரடித்தொண்டர்தம்மி
னலம்பெறுமம்பரீடநாமவேலரசனென்பான்
றலம்படுமுயிர்கள்யாவுந்தருமத்தின்வழியாற்காப்பக்
கலம்படுகடல்சூழ்வையமனைத்தையுங்கடந்துசெல்வான். (5)

ஆங்கொருகாலைதென்பார்க்கணிகலமணியாய்ச்சூட்டும்
பாங்குறுபாண்டிநாட்டிற்பரிகரியிரதஞ்சேனை
ஞாங்கரிற்கடல்போற்சூழநகுமணித்தேர்நடாத்தி
வாங்குவிற்றடக்கைவேந்தன்மதுரையைக்கண்ணுற்றானே. (6)

இன்புறுதோற்றஞ்செய்யுமெயிலதுவெயில்விரிக்கும்
பொன்புனைகுடுமியாழிப்பொருப்பெனப்பொலிவுகாட்ட
மின்படர்கபாடவாயில்விண்ணுயர்முகடுநீண்டு
நன்பெருஞ்சிகரக்கோட்டிநளிமதியுரிஞ்சிச்செல்ல. (7)

அரும்பெறற்போகந்துய்க்குமம்பொனாட்டும்பர்வேந்தன்
விரும்பும்வைசயந்தமன்னமின்மணிமாடகோடிப்
பெரும்பரப்பியாண்டுங்கோட்டியாமியப்பிறங்கலெல்லா
மருங்குடீஇநெருங்கும்வீதிவயின்வெறுஞ்செய்குன்றோங்க. (8)

நீவினிற்புறவின்மற்றைத்திணையினுள்ளனவுஞ்சேர்ந்து
மாவளந்தருபண்டத்தின்மல்கிமாறுதசெல்வத்
தாவணமறுகின்மாந்தரடித்துகளடங்கும்வண்ணந்
தூவல்வான்கங்கைதோய்த்துத்துகிற்கொடிதுளித்துவிச. (9)

உததிவெண்டிரையுட்போர்தாமுலப்பிலாத்திரைகளின்னு
மெதிர்பரந்துள்ளபோலாமென்றயிர்த்துன்னியுன்னிக்
கதிரிளம்பரிதிதேரின்கலினமானீந்தற்கஞ்சுந்
துகைமணிகிழல்செய்பைந்தார்த்தோரணமசைந்துதுள்ள. (10)

எழுயர்களிநல்யானையெருத்தத்தும்பரியின்மீது
மாழியந்தேரின்மீதுமநிகமோடெதிர்செல்வோரை
வாழியிந்திரரநேகர்தனபதியநேகர்வானிற்
சூழுமார்த்தாண்டர்தாமுமநேகரென்றியாருஞ்சொல்ல. (11)

வண்ணவெண்பளிங்கிற்செய்துமணித்தூண்பன்னூறிற்கோட்டித்
திண்ணையாலுயரட்டாலமேறிவெஞ்சிலையர்காப்ப
வண்ணல்வச்சிரத்தான்மற்றுவயிடூயமதனலாற்றப்
பண்ணியகிடைகடோறும்பனவர்நான்மறைகள்பாட. (12)

ஈரம்பயிருளத்தானுங்கால்பயில்குழலினானு
மரம்பையரனையமாதராடலின்சிறப்பினானு
நரம்பிசைவீணையானுநவில்பலமுழவினானு
நிரம்புசொற்கீதத்தானும்வாழ்பவர்நெருங்கிச்சூழ. (13)

இல்லறத்துள்ளவோமமியற்றவோர்வாசபேயம்
வல்லர்மாவிரதயாகம்வளர்ப்பவர்பரிமாமேத
வில்லழல்வேள்விசெய்வோர்விளங்குபன்மணிகளீட்டு
நல்லகுண்டலங்கேயூரகுமணிக்கடகம்பூண்டோர். (14)

பொற்பவித்திரத்தான்மல்குமங்குலிப்புதப்பூங்கையர்
கற்பவேதாங்கம்வேதங்கரைப்புறங்கண்டோர்மற்றும்
பற்பலமறையோர்வேந்தர்வணிகர்சூத்திரர்நாற்பான்மைச்
சொற்படியொழுகப்புந்திமந்திரர்பலருந்துன்ன. (15)

தருக்கவிஞ்சையின்மேற்கொண்டுதங்கள்பால்வென்றிசேர
வொருத்தருக்கொருத்தர்வாதித்துவகைமீதூருவாரும்
வருக்கமாஞ்சத்தநூலின்மனப்படத்தினைத்துளாருஞ்
செருக்குமீமாங்கியத்தின்றிறம்பலதெரிந்துளாரும். (16)

ஞானத்தான்மூத்துளாருநரைத்துடல்பழுத்துளாரு
மீனத்தீவினைகள்போக்குமியனெறிப்புலவர்தாமுந்
தானத்திற்சூரர்தாமுஞ்சார்தருவள்ளியோரு
மானத்தாற்பகையைவெல்லுமறவருந்தறுகணோரும். (17)

சிலைத்தொழில்வேதங்கற்றுத்தெளிந்தொடுங்கினருமல்ல
ரலைத்திடுஞ்சமரம்யாவுமறிந்தடங்கினரும்வைக
மலைத்திடுமெறுதேயத்துமன்னராலணுகொணாதாய்
நிலைத்துளநெடுநீர்வைப்பிலுத்தரமதுரைநேராய். (18)



மடங்கலேறனையதுப்பின்மதிகுலத்தரையர்காப்பத்
தடங்கிளர்மணிப்பூண்கொங்கைச்சதியருந்ததியைநேர்வா
ரிடங்கலந்தநேகர்வாழவெறிசுடர்மணிப்பொற்றூணந்
துடங்குமாயிரத்திற்செய்தசுராலயந்துவன்றிச்சூழ. (19)

மாண்புறுவெண்பொன்செய்தவரிபலவடுக்கிவேய்ந்து
சேண்பயில்பவளந்தன்னாற்கொடுங்கையுந்தகட்டுச்செம்பொன்
காண்புறச்சமைத்துள்ளிட்டபலகையுங்கவின்றுசோதித்
தூண்பயின்மாடப்பந்தியிருட்பகைதுறந்துசாய்ப்ப. (20)

தூவிவெண்சிறகரன்னந்தோகைமாமயில்கபோதம்
பூவைகண்முதலாயுள்ளபுள்ளினந்துள்ளியார்க்கும்
வாவிகள்கூபங்கேணிமலர்ந்ததாமரைகல்லாரங்
காவிகண்மிடைந்துவாசங்கமழ்ந்துதண்ணென்றுமொய்ப்ப. (21)

கற்படுத்திடைவிடாமற்கரைசெய்தவகழிவைப்பும்
பொற்புடையிளநல்லாரும்பூங்கணைக்கிழவனென்னச்
சொற்பெறுமிளைஞர்தாமுமேறிவீற்றிருந்துதோன்று
நற்பிரசாதமாடமேனிலைநகரிவைப்பும். (22)

சதுக்கமுஞ்சந்திதானுந்தகைபெறமகிழ்வினோடு
மதுக்கமழ்மலர்ப்பூங்கோதைமாதர்மென்பாவையன்னார்
முதுக்குறைமகளிரோடுமொய்த்திடப்பல்பூண்மேனி
புதுக்கிவில்லெறிக்குங்காமர்ப்புருடராடிடமும்பொற்ப. (23)

தாற்றிடைப்பழுத்ததாழைதாங்கருமிளநீர்சிந்திக்
காற்றிடையசையுந்தாழைகமுகிளஞ்சோலைசூழ
வேற்றிடனமைத்தகூடலெழிலெலாமுன்புநோக்கி
வேற்றடக்கரத்துவேந்தன்விம்மிதனாகின்றான். (24)

வேறு.

ஆயபொழுதுதனில்வம்பனுக்கியரைக்கலிங்கமகற்றியெங்கும்
பாயதெனப்பழுப்புக்கழித்துவசந்தனைத்தோய்ந்துபணைத்துப்பூத்துத்
தோயும்வரிச்சுரும்பின்மகப்பயந்துகனிமுலைப்பால்சுரப்பவூட்டித்
தாயில்லளிபடைத்ததண்பொழில்புக்காடுநரைத்தயங்கக்கண்டான்.

பண்ணையடிக்கொண்டபைங்கமுகினிளங்காவும்பாளைதன்னால்
விண்ணைமணங்கமழ்த்திக்குரும்பைவிடுதென்காவும்விரிபூச்சாய்த்து
மண்ணையகழ்ந்தெழுந்துகீழ்க்கன்றோடினம்புடைசூழ்வாழைக்காடு
மெண்ணுமுறைபெதும்பைமடந்தைபேரிளம்பெண்போலிருந்ததன்று. (26)

மாக்கேழ்வரிச்சுரும்புந்தென்றலுங்கண்டறியாவோர்மலரிக்காவின்
மீக்கேயெடுத்தருளென்றன்பனைக்கூயொருத்திசொலவேளையன்னா
னூக்கேயளந்தோடிப்பார்த்தனுகிநயனவண்டுமுயிர்ப்புஞ்சேர்கின்
மூக்கேவினவுமலரன்றென்றாலெப்பூவைமொழிவனென்றான். (27)

ஒருசார்சிலமாதர்நன்மலர்பார்த்தெய்தலுமாங்குள்ளகொள்ளைத்
தருவார்மலர்ச்சுரும்புதமதுகுழற்பூவில்விழுந்தகைமையாலே
செரிவார்வனமிதிற்பூவில்லையில்லையெனப்போய்ப்போய்த்திரிதந்துற்றார்
வருவார்நமக்குமலரெடுப்பதற்குமனமில்லையோவகுப்பீரென்ன. (28)

ஒருமாலதிவளைத்தீட்டிருகரத்தும்பூநிறைத்தாளொருத்திதன்பால்
வருமாடவன்றனையென்கலைமடித்துத்தருதியெனமற்றன்னானும்
பருமாண்கலைதூக்கிமடிகூட்டிவிடுத்திடலும்பாவைகாணா
ளிருமாமணித்துடைகண்டொருத்திசொலமூடுகின்றாளிடுபூச்சிந்தி. (29)

சேயார்நெடுங்கோட்டுவகுளமலரெட்டான்கீழ்ச்சிந்தும்பூவை
வேயார்பெருந்தோளிமலர்க்கரத்திற்கொடுத்தானோர்விடலையன்னாள்
காயாமலரன்றோகேட்பதென்றாண்மற்றிவனுங்காயாப்போதை
நீயார்ந்தணியென்றுபறித்தளித்தானன்றுனதுநிகழ்ச்சியென்றாள். (30)

காவாயொருமகளைச்சண்பகமும்பூந்தளவுங்காந்தட்போதும்
பூவாய்த்திடுதளிருங்கருவிளையுங்கோங்கரும்பும்பொய்தற்கொய்து
பாவாய்ப்பகைமுடித்தாயினிப்போதும்போதுமென்றுபகர்ந்துங்கேளாய் [ன்றல்
வாவாவெனவழைத்தோர்மலர்ப்பொதும்பர்க்கொண்டுசென்றான்மற்றோர்தோ

மொய்த்தாட்பசுங்கொடிகள்படர்ந்துமிடைந்திடமூடிமுல்லைப்பந்தர்
பெய்தாதணிமலர்கள்புவிதூர்ப்பநிழல்பரப்பும்பிண்டிக்காவை
மைதாழ்குழலொருத்திபள்ளியறைப்பாயலெனமனத்திலோர்ந்து
செய்தாணைகைக்குறிப்புத்தெரிந்திவனுமாட்பார்க்குஞ்செய்கைபூண்டான். ()

காப்பூவளைக்கரத்தால்வளைத்தெடுத்துநுண்கலையுட்கரந்தோர்பாவை
சேப்பூரடிச்சிலம்புபுலம்பவிரைந்தேகலுமச்சேலைபற்றிக்
காப்பூண்மணிமார்பனவிந்திடமற்றவன்கரத்தைக்குழைந்துதள்ளிப்
ப்பூ[illegible]விடென்றாளவ்வுரைகேட்டிவன்குளிக்கப்புதுநீர்புக்கான். (33)

[illegible]த்தவிளங்காவின்முகையுடைந்துகமழ்ந்தமலர்பறிப்பாரின்றிக்
[illegible]த்தகிடையிதுதானென்றாலோவெனவொருத்திகேட்பக்கேள்வன்
ப [illegible]யரம்பையர்தாம்வந்துகொய்வாரின்றனையார்மதன்போர்க்கெய்த்தார்
கடந்து[illegible]வளுமவரைவென்றாணுதலினற்கிளையாளென்றான். (34)



பேதாயகநெகிழ்ந்துமுகைவிரிந்தநறுங்கோங்குபிணித்துச்சூழ்ந்து
மீதாய்ப்படர்ஞாழற்கொடிகனப்பத்தலைவணங்கும்வியப்புப்பார்பா
ரேதாயிருந்ததெனுமொருத்திக்கொருத்திநங்கோனெழுந்துநின்று
நீதான்கழுத்தணைப்பக்கவிழ்ந்ததரங்கொடுப்பதனைநிகருமென்றாள். (35)

தேனூர்நறுமலரைத்தொடுத்தணியவெங்கைவருஞ்செய்கைபாரீர்
நானூறெனக்கேட்பவறிதிருந்தீரெகுமென்றோர்நல்லாள்சொல்ல
மானோர்விழியணங்குபுகன்றவுரையூடலெனமனத்துட்கொண்டோன்
கானூரடிவணங்கியடியேன்செய்பிழைபொறுத்தல்கடனேயென்றான். (36)

வேறு.

அந்நேபகன்றிளையாருடனனங்கன்றிருநாளாம்
வெங்கோடையிற்குளிர்வேண்டுபுவெள்ளப்புனனிரப்பிப்
பங்கேருகமலர்வாவியுமிலவந்திகைப்பகுப்புங்
கொங்கேர்முகிழ்முலையார்திரள்கொண்டாடுதல்கண்டான். (37)

பொடிகொண்டகுங்குமமும்பொதிவரைச்சாந்தமும்போது
மடியுங்கொடுவருவோர்கையின்மணிப்பூண்கழித்தளித்துப்
படிகம்பயில்படியும்புனற்பரப்பும்பகுத்தறியா
ரடிகொண்டிழிந்தன்னத்திரளென்னத்துறையணைவார். (38)

நீரூர்கடன்முகட்டிற்புனனிறையக்குடித்தலவிக்
காரூருதலெனவார்குழல்கலைந்தெங்கணும்பரவத்
தேரூசலின்வடமாமெனத்திரைபோய்க்கரைமோதப்
போரூர்கயல்பொருகண்ணியர்புனலாடுவர்மாதோ. (39)

ஒருதிக்கொருகணவன்வெரினூருட்டிக்குழலிழுகுங்
கிருதத்தினுமருணக்கனிகீண்டாட்டியசாற்றாற்
குருதித்தடங்கயல்போல்விழிசிவப்பத்தடங்குடைய
வருதிக்கினைத்தெரியாளெனவவன்கைதரவருவாள். (40)

ஒவ்வாவெழிற்றிருமாலுடனாடித்தனிவருங்கா
லிவ்வாண்மனைக்கொளிவாளெனமுளரிக்கிடையெல்லாங்
கொய்வாள்கையிலெட்டாமலர்க்கருணன்றனைக்குறித்து
வைவாண்மலர்த்திடலென்றொருவைவாளனகண்ணாள். (41)

பரந்தாழ்புனலவண்செல்லலையிவணில்லெனப்பணித்தோன்
கரந்தாடமற்றொருவன்னிவள்காலுட்சிரங்கரப்ப
விரந்தான்றனக்குரியானெனநின்றாள்குனிந்தெடுப்பச்
சிரந்தாழ்த்தவனகன்றானிவளணிக்கரைசேர்ந்தாள். (42)

நஞ்சம்பொதிந்தமிழ்தூறியநயனத்தொருபாவை
வஞ்சம்பனுக்காற்றொளித்திருக்கத்தலமமைத்து
நெஞ்சந்தழைத்திடுவாளெனநீருட்புகத்துணைவன்
கஞ்சங்களைந்தாய்ந்தானொருகணைபோயதென்றெழுந்தாள். (43)

மேலெங்கணும்புனரேய்ந்ததன்வெண்டுகிலுண்மறைந்த
நாலங்கமுஞ்சிற்சில்விடநனைகின்றிலவென்று
மாலங்கனம்படைத்தான்கையில்வாரிப்புனலிறைப்ப
வாலிங்கனம்புரிந்தாளிறைத்தவன்மேல்விழுந்தொருத்தி. (44)

சிலைகாணியநுதலாளொருபடிதப்பினள்செப்பேர்
முலைகாணியநிலைநீர்நின்றுமுன்கைகளைநீட்டி
யலைகாணியபுனனீந்தலுநிதுவேயவிநயமென்
றிலைகாணியவேலான்சொல்லவள்யானலவென்றாள். (45)

தடங்கொங்கைகளெரியக்குழல்சரியத்துணர்சொரிய
நுடங்குந்துகிலேறக்கடைநோக்கந்தடுமாறத்
துடங்கும்பெருமூச்சோடெழுந்தமிழ்ந்தித்துவளாசை
யடங்கின்றிலராடுந்துறைகூடுந்துறையனையார். (46)

வெண்டிங்கடன்னிலவாகியபலகைகளைவிரித்துக்
கொண்டிங்குளவிருள்யாவையுங்குடிக்கத்திரட்டுதல்போ
லுண்டின்றெனுமிடையார்புலவொழுக்குங்குழன்முறுக்கித்
துண்டந்தருவெண்டுகிலுட்பொதிந்தார்முகந்துலங்க. (47)

கோதிக்குழல்புலரும்படிகுதிவீழ்மயிரடித்தோர்
பாதிப்பிறைநுதலாள்குறுந்திவலைக்கணம்பரத்தச்
சோதித்தினப்புயல்பெய்திடுந்துளியேந்துசுத்திலைப்போன்
மீதிற்படுந்தொறுமேற்றுளம்வியந்தானொருகாளை. (48)

சாந்தந்திமிர்ந்தயனின்றிடுந்தளிர்மெல்லடித்தையல்
பூந்தண்பொடிச்சுண்ணந்திருமுகத்திற்படும்போழ்திற்
காந்தன்கண்ணுமுகமுங்கையிற்றுடைத்தாள்கடிதோடித்
தீந்தண்புனல்வாய்ப்பெய்துகொப்புளித்தாளென்னசெய்வாள். (49)

கருப்பூரமுநாறுஞ்சாந்தமும்பனிநீர்தனிற்கலந்துன்
பொருப்பூர்முலைக்கல்லாற்பிறர்பூசுந்தகவன்றென்
றருப்பூர்நகைக்குரியன்றாவவள்கையினும்வாங்கா
ளுருப்பூர்தருமுலைப்பெய்தனளுலைப்பெய்தனகண்ணீர். (50)



சிந்தூரமுஞ்செழுஞ்சுண்ணமுஞ்செறிசந்தனக்குழம்பும்
பந்தார்முலைதிமிர்ந்தாடலிற்படியும்புனலெல்லா
மந்தாகினிதனைவாணியெனும்பேர்வரநதிதான்
முந்தாவலிற்கலந்தொன்றியமுதாதண்டுறைநிகரும். (51)

கறைவாளனகண்ணார்மணிக்கழுத்துங்கனதனமும்
பொறைவான்கொடியிடையுந்துணைப்புயமுங்கடிதடமுந்
துறைவான்மணிவடத்தாற்படத்துகிலான்மறைத்திடலா
லுறைவாளிவிட்டெனலாம்பிறிதுவமைக்கிடம்யாதோ. (52)

வேறு.

அவ்வகைபுனல்விளையாடிமாதருங்
குவ்வியதிரள்புயக்குமரர்கூட்டமுங்
கவ்வைசடீர்ந்தினிக்கவ்வைகோடுமென்
றெவ்விலாமதுவிளையுண்டன்மேயினார். (53)

ஏலமும்பளிதமும்லவங்கத்தோடுதக்
கோலமுஞ்சாதியுங்கூட்டித்தீம்பயன்
சாலமும்பிழிந்திளப்பதஞ்செய்தண்ணறாப்
போலுமுண்டோவமிர்தெனப்புகழ்ந்தரோ. (54)

பண்டியிற்சாடியிற்படுமிலாஞ்சனைக்
குண்டிகைதனின்மணிக்குடத்திற்போந்தன
தொண்டியைமொண்டுதந்தொண்டிமார்தரக்
கொண்டனர்தொண்டைவாய்மணக்குங்கொள்கையார். (55)

கள்ளினானிறைத்தபொற்கடத்தைச்சாய்ப்பவர்
வெள்ளியின்வள்ளத்தில்வீட்டுந்தாரைதான்
றெள்ளியபாலுவைக்குடைந்துநின்றரா
வொள்ளியமதியுளும்பாய்வதொத்தவே. (56)

நெடிதறுகாலிறைநீதள்ளென்றொரு
தொடிசொலச்சேடிபுற்றொடுகட்சிந்தினாள்
கடிகவண்டெனமறந்திவளுங்கட்சிந்தும்
படியெவட்கெனவவள்படிமகட்கென்றாள். (57)

நிரம்புகள்ளருந்திடுமொருத்திநீள்குழற்
சிரம்பணித்தடிக்கடிசிறைவண்டோச்சவும்

வரம்பிலாதளிவிழும்வாதைக்காற்றிடாள்
கரம்பயில்வள்ளத்தைக்கல்லின்மோதினாள். (58)

வடித்ததெள்ளமுதெனவாக்குங்கள்ளைமுன்
றுடித்திதழ்வருந்துமென்றருந்திச்சோர்ந்தபின்
குடித்திடுவெள்ளமுமுதடுகோள்படக்
கடித்தனள்விடுவிப்பாரின்றிக்கன்றுவாள். (59)

மாதராளொருத்திதன்மதிமயங்கியா
னூதனமதுவினைநுகர்ந்திலேனெனாப்
பேதைமற்றொருத்தியைப்பிடித்துவாய்மண
மூதுவாள்போன்றுமூச்சுயிர்த்துக்காட்டினாள். (60)

மயலுறுமொருத்திதன்கண்ணின்வண்ணமு
மயலுறுதும்பியினிழலுமாடலாற்
கயலையுஞ்சுரும்பையுமவள்ளக்கள்ளொடும்
பயில்புறக்குடித்ததென்றுமிழ்ந்துபார்க்கின்றாள். (61)

நிழல்படாநறவெடுத்துண்டொர்நேரிழை
கழிபடுமிச்சிலிற்கரந்துள்போகியென்
கொழுநனையொருத்திதான்கூடுவாளினி
வழிவிடேனென்றுதன்வாய்புதைத்திட்டாள். (62)

பூட்டிவாண்முலைக்குடப்போகமாமது
வூட்டிவாய்வள்ளத்திற்கள்ளூமூட்டவே
காட்டிவாணலனெலாங்கவர்ந்தகள்வனைக்
கூட்டிவாவெனநிழற்கொருத்திகூறினாள். (63)

ஒருபொழுதினுமதுவுண்டிலேனிது
புரிமயக்கான்மடநாணம்போக்கினும்
வருபுறனறிந்திடாவண்ணங்காத்தியென்
றருகுறமிகுளையையொருத்தியண்மினாள். (64)

கிஞ்சுகவாய்ப்பெய்தோர்தெண்டையங்கணு
ளெஞ்சுகள்பஞ்சரத்திருந்துபேசுத
னஞ்சுகவாயிற்பெய்தன்பனூடலிற்
கொஞ்சுகட்டுரையெலாங்குழறக்கேட்பளால். (65)



வெறிசெயுஞ்செங்கணும்விளர்த்தவாயும்பற்
குறியுங்கொண்டொருத்திதான்குறுகக்கண்டவ
ளறிகிலேனும்புணர்ப்புனையணைந்ததார்
மருவில்கந்தருவனோமதனனோவென்றாள். (66)

பூமதுநுகருமோர்பூவைதன்முகக்
காமர்போனிறைமதிகவித்தசாயையோ
டேமுறப்பருகிமற்றியானருந்தலே
சோமபானம்மெனத்துணிந்துகூறினாள். (67)

இன்னணம்புதுநறையினையரோடருந்
தந்நலார்மதுரையராகிப்பின்னருங்
கன்னல்வில்வேண்மலர்க்கணைகள்பாய்தலான்
மன்னியகூடலின்வாணராகுவார். (68)

ஆயபல்வளனெலாமம்பரீடனுந்
தூயவன்கண்டுகண்டகன்றுதொல்லையோர்
பாயபுண்ணியத்தடம்பன்னசாலைகண்
மேயவுங்கடந்துபோய்மேக்குநோக்கினான். (69)

வேறு.

வடதிசைக்கணுளமதுரையாமிதெனவாழ்த்தியந்நகரிநாப்பணே
நடைபடக்கடிதுபுகுதுமவ்வளவினமுவியாண்டையவைகுந்தமிப்
புடவிவைப்பில்வரல்போலுமென்னநனிபுலவர்தச்சனுமனத்தினு
லடைவியற்றியவட்டாங்கமாமணிவிமானநோக்கினனலங்கவே. (70)

பொன்னிழைத்திலகுமதிலுநன்மணிபொலிந்ததோரணமுநாற்றிசை
தன்னில்விட்டொளிர்கபாடவாயிலுமொராயிரங்கதிர்தழைத்துளா
னன்னபொற்பினிலையேழும்வச்சிரமிழைத்தகுட்டிமமுமணிபெறத்
துன்னுகாசில்குதூணகோடியொடுசோதிவெண்படிகவேதியும். (71)

கண்டகம்பலவும்வெயிலிறைப்பவணிகையராயுலவுவெய்யரா
யெண்டருங்குமுதனாதிசாரதர்களேவல்செய்துவளைகாவலுஞ்
சண்டனாதியதுவாரபாலரொடுதாங்குசேனைமுதலோன்முதற்
றொண்டர்காவலுமனந்தனாதியர்பயந்தொடுங்கியுறைசூழலும். (72)

நித்தசூரிகளெனப்பதங்கள்பெறுநெடியமால்வடிவினடியரும்
பத்தியாயதிசைபாலரானவர்பரிந்துசூழ்பரமவாயிலுங்

கொத்தலர்ப்பதுமமுனியுமிந்திரன்முதற்சுராதியர்குழுக்களு
மெத்திசைக்கணுநிறைந்திவண்ணமுளவேமமாமணிவிமானமேல். (73)

காமர்சேருமணிபீடமீதிருபுறத்தினுங்கமலமாதுடன்
பூமிமாதுமினிதமரவின்பமொடுபுந்தியன்புகவர்சுந்தரன்
வாமபாதமதுதான்மடித்தெழில்வலப்பதஞ்சிறிதுகுந்தியே
சோமசூரியர்கள்போலெழுந்தருளிவைகினன்மறைதுதிப்பவே. (74)

அங்கிருந்தருள்சுரந்தமாதவனையம்பரீடனும்வணங்கியுட்
பொங்குமன்பொடுமுடித்தலைக்கொடுபுவித்தலைப்படவுமுறைமுறை
சங்கையன்றிவிழுதண்டெனத்தொழுவனெழுவன்மூரலொடுமழுவனுந்
துங்கயோகியரிலகமகிழ்ச்சியெனுமுததிநீரிலடைதுளைந்தனன். (75)

அதிசயிப்பனுடல்புளகரோமறழகிலலைகுவன்புருடசூத்தமாந்
துதியினிற்புகழ்வன்விரைவினண்ணலையுவப்புறும்படிதொழிற்செய்வான்
பதமடிக்கடிபெயர்ப்பனுவலொடுபன்முறைப்படவலஞ்செய்வான்
விதிர்விதிர்ப்பனிருவிழிபரப்புவன்வெறிப்பனுமையின்மிதப்பனே. (76)

ஆடுவன்புகழ்வன்மகிழ்வனன்பினொடுவேலையென்னவசமயருவா
னீடுபுந்தியுடைதிருபணிவ்வணமிகழ்ந்துதேறினனிகழ்த்துவான்
பீடுசானலமையாய்விமானவழகாமனங்கவர்பெருந்தகாய்
கூடலாயதிருவுடன்சிறந்தவதுறந்தவர்க்கருள்செய்கொண்டலே. (77)

வேறு.

தோற்றியொடுங்குமுடற்றுன்பப்பெருநோயை
மாற்றவலியின்றிமனத்தான்மிகவெருவிச்
சாற்றரியநின்னைச்சரண்புகலாய்வந்தடைந்தே
னாற்றமெலிந்தேனலந்தேனருட்கடலே. (78)

பொன்னிறையுந்தாமரைமென்போதனையவின்னடியை
யுன்னியதோர்மாத்திரையேகூற்றினையுமோட்டிவிட்டே
னென்னிறையேயென்றுமுனையேத்திவழிபட்டிடநின்
சன்னிதியில்வைகுந்தவமெனக்குநல்காயோ. (79)

ஐயாவழிவழிநின்னம்பொனடித்தொண்டர்களாய்
மெய்யானமுத்தர்களாய்நித்தராய்வீட்டின்பிற்
பொய்யாதசெல்வமுற்றபுண்ணியரிற்சேர்ப்பதெந்நா
ளையாதயானுமுனக்கேவல்செய்வதெந்நாளோ. (80)



போற்றியுனைத்தொழுகின்றேன்புரிந்தருளாய்கோவேயென்
றேற்றமுறவிரந்திரந்துவேண்டுவானியற்பூசை
யாற்றியந்தவம்பரீடப்பெயரானுயிரத்து
னூற்றியாண்டளவிருந்துநோற்கின்றான்மதுரைதனில். (81)

அளவளாயிதமுணர்த்துமடியரொடுந்துவாபரத்தின்
கலைவிலாக்கடைக்காலத்திவணிருந்துகழல்பரவத்
துளவமாலருள்பழுத்தன்றொண்டிமைநன்குவந்தனமால்
விளைவிதோர்செயல்கேட்டிவெவ்வியதெல்வடுவேலோய். (82)

நமதுறையுளிதற்குவடகீழ்பாலினவிலுங்கா
லமருமெமக்குறையிடமாயணித்துளதால்யானைமலை
தமரமிடும்வெள்ளருவிதவழ்ந்திழியுமவ்வரைக்குச்
சுமதியுளாய்நடத்தியவண்டொன்றுளேவைகுதுமால். (83)

நாரசிங்கவடிவுடையநமதருகில்வதிந்தியோகத்
தோரகங்கொண்டிருத்திவிரைந்துனக்குமுத்திதருதுமவண்
பாரடங்குமெமக்குளடைபதம்பெறுவையெனப்புகல
வீரசங்கமணிந்தானைப்பணிந்துவிடைகொடுநடந்தான். (84)

ஆனபொழுதகமுவந்துமுகமலர்ந்தாளரியிருக்கும்
மானமலைதனிலெய்திவெட்டுருப்பின்மணிக்கோயில்
வானவனங்கருளியசொற்பலகாலுமனத்தெண்ணி
ஞானசமாதியிலிருந்துநாள்சிறிதுகழித்தனனால். (85)

முன்னமுறுரோமசமாமுனிதவச்சாலையில்வைகி
யன்னநிலையினனுகுமம்பரீடப்பெயரின்
மன்னவன்முனெழுந்தருளிமாயவனுங்கதிவழங்கத்
தன்னதெனப்பூதமைந்தாற்சார்ந்தவுடலினைத்தணந்தே. (86)

வேறு.

உவனிடமைந்துகொண்டெடுத்ததோருட
லவனடைந்தானுரோமசனுக்காகமுன்
றவநரசிங்கமாய்ச்சார்ந்துதந்திவான்
குவடுறுகுகைத்தலத்தமர்ந்தகொண்டலும். (87)

வண்டகுமுலகினுக்கிதம்புரிந்தரு
ளாண்டகையெனப்புகழ்ந்தமரர்சித்தர்மற்

நீண்டெகந்தருவரேத்தெடுப்பவேந்தற்கு
வேண்டியபதமளித்தங்கண்மேவினான். (88)

என்னநாரதனெனக்கிசைத்தகாதையைத்
தன்னுசாரச்சோதத்தடத்தின்சூழல்வாய்ப்
பன்னினன்வையையின்வடாதுபாங்கரி
னந்நெடுங்குன்றில்வாழண்ணற்சீயமும். (89)

தனியொருகாலையிற்சனகராதியா
முனிவரர்வழிபடமுத்திநல்கிஞ
னனியுரோமசனெனுருஞான்றருச்சனை
வினைசெயப்பவவினைவிடுவித்தானரோ. (90)

அடுத்தனனாகியாண்டமரும்யோகத்தன்
பெடுத்தபேருடலெனவின்பமூழ்குநா
ளுடுத்ததோலுரோமசற்குந்திபூத்தமா
றடுத்தெதிர்தோன்றினனிவனுந்தாழ்ந்தெழா. (91)

ஆண்டகாயென்றும்யானழிந்திடாவரம்
வேண்டுகேன்றருதியென்றிரப்பமேலைநா
ளீண்டமாலுவந்தநீகினைந்தவண்ணமே
யீண்டையெபெறுதியென்றிசைத்துப்பின்னரும். (92)

ஒருபதினாயிரங்கற்பமுற்றபல்
பிரமராயுளைப்பெட்பினலடைந்
தருளொடுந்தெளிவொடுமமர்ந்தெம்பாங்கரின்
மருவெனநரவரிவழங்கினனரோ. (93)

இனிப்பிறவாவகையென்றுமுள்ளனு
முனிப்புலியென்றனன்முகுந்தனல்கிய
தனிப்பதமடைந்தனனின்னுந்தண்டுழாய்ப்
பனிப்பசும்படலையான்பாங்கர்வைகுவான். (94)

இரண்டாவது: அம்பரீடப்படலம் முற்றும்.

துவாபரகாண்டம் முற்றும்.

ஆகக்கவி—531.

---

# கலிகாண்டம்.

முதலாவது:

## உருவசி சாபநீங்குபடலம்.

———:(o):———

சரோருகக்கிழவனொடுசனகர்வழிபடுமதுரைதனிலம்பரீடன்வரவு
முரோமசற்கழியாதவரமுதவுசெயலுமிங்குரைசெய்தும்வியாதனருளால்
வருதினிச்சுரர்பதிசொல்சாபத்திழுக்கிவருவனிதையுருவசியினுடனே
புரூரவக்குரிசில்புணர்கதையுமவரிருவர்பின்புகுகதியுமினியுரைசெய்வாம். (1)

பேசரியபுனிதபாராசரியமுனிவனால்பேதமறமுழுதமுணரு
மாசிரியவுனதருணிறைந்தபொருளதனைலறிந்தபொருளுடையரானே
மாசிரியவாதரவுதரியாதபரமுனதாமலரடிபணிந்துதொழுதுந்
தேசுறுநின்முககமலமுமிழுமகரந்தந்தெவிட்டியுட்விடாயதகலேம். (2)

முறைமுறைவினாவியுமடங்குகிலவெமதாசைமோதுதிரைவையாதியின்
றுறைவனெனவன்விச்சுவகன்மாதிருமிதஞ்செய்தசுடர்மணிவிமானமதனு
ளுறையுமொருவரதனெவனவனுமொருகலியுகத்துறுமுதற்காலமெவனான்
மறைவழியருச்சிக்கவைகினனெவனுக்குவந்துமுன்னின்றருள்செய்தான். (3)

அத்தலைநிகழ்ந்தவதிசயமென்னையெங்கட்கருந்தவபொருந்தவுரையென்
றுத்தமச்சவுனகாதியர்வினவவாதிமறையோதினவியாதன்மொழிவான்
புத்தமுதகிரணமதியக்கடவுள்பெற்றசேய்புதனெனுமியற்பெயரினான்
சத்தியநெறிப்புதன்றருசேய்புரூரவச்சக்கரவருத்தியென்போன். (4)

ஒலிகெழும்பரவைசூழுலகமொருகுடைநிழலினுயிரனைத்தையுமணைத்துக்
கலிகடிந்தருள்வழிநடாத்துசெங்கோலினான்கருதலர்களறிவேலினான்
மலிபெரும்புகழ்திசைபரப்பினான்மனுநெறிவரப்பினான்மதிநிரப்பிப் [னான்,
பொலிவுறுங்கலையினான்மதனனையும்வென்றதொருபொற்பினான்புயவெற்பி

வேறு.

அன்னவனோர்காலையெழுமாசையின்மயக்கா
லுன்னதமுலைக்கொடியுருப்பசியினோடெக்
கன்னனுகர்வோனனையகாமுகனுமாகி
நன்னலனுகர்ந்துலகினுள்பலகழித்தான். (6)

புதையமுலைபுல்கியனுபோகமயல்போகா
துதையமுதன்மாலைவரையொன்றுமுணராமே
னுதையவருடம்பலதொலைத்துமொருசற்று
மிதையநிறைவின்றியவளின்பமுருவானான். (7)

தருப்பசியகாவுறைசதக்கிருதுவென்ன
வுருப்பசியுடன்புணர்வுழிப்பெரிதுமாசைக்
குருப்பசியடங்கிலதுகொள்ளைகொளமேன்மே
னெருப்பசிசமித்தெனவுநெய்யெனவுமான. (8)

அங்கவளுமோவதரபானமவனைப்போ
னுங்கினள்பகிர்ந்தவிநுகர்ந்தவெறியென்னப்
பொங்கினளடங்கிலளகம்புறமுமொன்றுட்த்
தங்கினளடிக்கடிசமைந்துளதுகாமம். (9)

என்னமுனிசொன்னமொழியாதையும்வினவி
மன்னனவனுக்கமரர்வானுலகமாதி
னன்னலம்விளைந்ததெவனன்குறவுரைப்பாய்
முன்னமுணர்வோயெனமுனித்தலைவர்சொன்னார். (10)

இவ்வுரைசெவிப்புகலுமேற்றமுறுசீலத்
தவ்வுணர்வியாதமுனிதொன்மரபுநாடி
யவ்வயினிகழ்ந்துளவனைத்தையுமனத்தாற்
செவ்விதினளந்திவரைநோக்கியிதுசெப்பும். (11)

பண்டிருவர்பன்னிருவர்பன்னொருவரெண்ம
ரெண்டகையகோடியமரேசர்புடைசூழ
வண்டிரைதுணர்த்தருமதுத்துளிபிலிற்றக்
கொண்டலிடிமின்பவனகோடிபணிகேட்ப. (12)

பாகுபடுகந்தருவபாடகரொடாகா
ஆகுவெனும்விஞ்சையர்செவிக்கமுதமூற்ற
நாகிளமுலைக்கொடியரம்பையர்நடிப்ப
மோகரிதவாரிதிகர்துந்துபிமுழங்க. (13)

நாகைமுகச்சசிகடேற்றிபகிலாப்போன்
மேனகைதிலோத்தமைநல்வெண்கவரிவீசப்
பூநகையகோதையயிராணியுயிர்போல
வானகமணித்தவிசில்வாசவனிருந்தான். (14)

No. 2.

# CHAMBERLAIN'S COUGH REMEDY.

## இருமலுக்கு சேம்பர்லேன்துரை கண்டுபிடித்த மருந்து.




இது,

இருமல், சீதளம், சளிமாந்தம், நெஞ்சிழைவு, கக்குவாய் இருமல் முதலான தொண்டை, மார்பு வியாதிகளை எல்லாம் நீக்கும்.

இருமல்விஷயத்தில் அசட்டையா யிருக்கலாகாது. அது அபாயத்துக்கிட மான நோய். அது, கபவாதசுரம், இரத்த காசம், க்ஷயரோகம் முதலியவைகளில் கொண்டுவிடும்.

சேம்பர்லேன்துரை கண்டுபிடித்த இருமல்மருந்து, நெஞ்சிலிருக்கும் கபம் அல்லது கோழையை நீக்கும்; உப்பசத்தை ஒழிக்கும், மனதில் சிலியுண்டாக்கும், இருமலையும் போக்கும். நுரையீரலில் (மாரடைப்பு) கஷ்டமில்லாமல் சுவாசம் தாராளமாய்ப் போகவரச்செய்யும். இரவில் இருமலின் உபத்திர வத்தைக் குறைக்கும், நித்திரையைக்கொடுக்கும்.

சேம்பர்லேன்துரை செய்த இருமல்மருந்தில் அபினிக்கலப்பில்லை.

☞ இது மூலிகைமயமான மருந்து.

☞ கைபடாமல் செய்த மருந்து.

எங்கும் கிடைக்கும்.

சின்ன புட்டி ரு. 1. பெரிய புட்டி ரு. 2.

225102